# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 251 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 19, திங்கள் 04.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04




விதிமுறைகளை மீறிய அமைச்சர் 2





ரஷ்யாவுடனான நேட்டோ உறவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் 7





கையாலாகாத மனிதராக தவிக்கின்றார் ஜனாதிபதி 8






பணங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் சம்பியன் 8


# தமிழ் மாணவன் மீது கொடூரத் தாக்குதல்

## சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சம்பவம்
## ஏனைய தமிழ் மாணவர்களுக்கும் கொலை அச்சுறுத்தல்




பல்கலைக் கழகத்தில் ஒட்டப்பட்டிருந்த துண்டுபிரசுரங்களில் ஒன்று.

யாழ்ப்பாணம், ஓக. 4
சப்ரகமுவ பல்கலைக் கழகத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு தமிழ் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அதிகாலை 2 மணியளவில் தமிழ் மாணவன் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர்கள் விடுதியின் கழிவறையில் இனவாத ரீதியான வாசகங்கள் சிலவற்றை எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். தமிழ் மற்றும் ஆங்கிலம் கலந்து இந்த வாசகங்கள் எழுதப்பட்டுள்ளதுடன் அதில் மொழிப் பிழைகளும் காணப்படுகின்றன. இது எங்கள் நாடு, நீங்கள் போய்விடுங்கள், நீங்கள் புலிகள் போன்ற வார்த்தைகள் அவற்றில் எழுதப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் (வயது-21) என்ற புதுமுக மாணவனே நெஞ்சுப் பகுதி, முதுகுப் பகுதி ஆகியவற்றில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெரும்பான்மையின மாணவர்களாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிப்பதாக அங்குள்ள சக மாணவர்கள் கூறுகின்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழ கத்தில் கலைப் பிரிவின் கீழான சமூக விஞ்ஞான கற்கைநெறி,


17 ஆம் பக்கம் பார்க்க


## இலங்கை வரவுள்ளார் சீன ஜனாதிபதி

கொழும்பு, ஓக.4
எதிர்வரும் வாரங்களில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மூன்று நாடுகளின் அரசுகளுடனும் ஒத்துழைப்பை வலுப்படுத்திக்கொள்வதே சீன ஜனாதிபதியின் பயணத்தின் நோக்கமாக உள்ளது.

சீன ஜனாதிபதியின் பயணத் திகதிகளை அந்த நாட்டு அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர் என்றும், அவர் பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட பின்னர் இலங்கைக்கு வருவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## காணாமற்போனோரின் உறவுகள் இரகசியமாகச் சாட்சியமளிப்பர்

யாழ்ப்பாணம், ஓக. 04
ஐ.நா விசாரணைக்குழு முன்பாக காணாமற் போனோரின் உறவுகள் இரகசியமாகச் சாட்சியமளிக்கவுள்ளனர். அதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன்.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் வெளிநாடுகளில் பல்வேறு நகரங்களில் நேரடியாக இடம்பெற்று சாட்சிகள் திரட்டும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் ஸ்கைப் உள்ளிட்ட நவீன தொடர்பு சாதனங்களின் ஊடாகவும் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இலங்கையிலுள்ள காணாமற்போனோரின் உறவுகளும் நவீன தொடர்பு சாதனங்கள் ஊடாக சாட்சியமளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குரிய நடவடிக்கைகள்


17 ஆம் பக்கம் பார்க்க


## நியதிச் சட்டம் குறித்தே விவாதம் நடைபெறும்

### மாகாண சபையின் நாளைய அமர்வில்

யாழ்ப்பாணம், ஓக.4
நாளை இடம்பெறவுள்ள மாகாண சபை அமர்வில் நியதிச் சட்டங்கள் தொடர்பில் மாத்திரமே விவாதிக்கப்படவுள்ளது. இந்த அமர்வில் எந்தப் பிரேரணைகளும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 13 ஆவது அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு


17 ஆம் பக்கம் பார்க்க


## ஐ.நாவின் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மஹிந்த உரை?

யாழ்ப்பாணம், ஓக. 04
இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணையின்வாய்மொழிமூலஅறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபையில்· சமர்ப்பிக்கப்படவுள்ள சந்தர்ப்பத்தில், ஐ.நா பொதுச் சபையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா பொதுச்சபையின் 69 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.


17 ஆம் பக்கம் பார்க்க



## உள்ளக விசாரணையில் தடை செய்யப்பட்டோர் சாட்சியமளிக்க முடியாது

### காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் தலைவர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 04
போர்க் குற்றம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் உள்ளக விசாரணைகளில், இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களோ, தடை செய்யப்பட்ட நபர்களோ சாட்சியமளிக்க முடியாது என திட்டவட்டமாக 'உதயனுக்கு' தெரிவித்தார் உள்ளக விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்கள், கடந்த மாதம் 15 ஆம் திகதி விடுக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விரிவுபடுத்தப்பட்டது. இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு ஆணைக்குழு அறிக்கையிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய இந்த ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு, மூன்று சர்வதேச நிபுணர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருந்தனர்.



ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம், விரிவுபடுத்தப்பட்ட ஆணைக்குழு அதிகாரங்களுக்கு அமைய முன்னெடுக்கப்படவுள்ள போர்க் குற்ற விசாரணையில் புலம்பெயர் தமிழர்களும் சாட்சியமளிக்க முடியும் என்று தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசால், கடந்த மார்ச் மாதமளவில் புலம்பெயர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்டு வரும் 16 அமைப்புக்களும், 424 தனிநபர்களும் தடைசெய்யப்பட்டவர்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டனர். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் தனிநபர்களும், அமைப்புக்களுமே இலங்கை அரசால் இவ்வாறு தடை செய்யப்பட்டது.

அவ்வாறு தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் அல்லது தடை செய்யப்பட்ட நபர்கள்,


17 ஆம் பக்கம் பார்க்க


CMYK

# இலங்கை பொலிஸாருக்கு பயிற்சிகள் தொடரும்

## ஸ்கொட்லாந்து பொலிஸ் உறுதியளிப்பு

கொழும்பு, ஓக.4
இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விவகாரம் தொடர்பில் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ள போதும், இலங்கை பாதுகாப்பு படையினருக்கு ஸ்கொட்லாந்து நாட்டின் பொலிஸாரால் வழங்கப்படும் பயிற்சித்திட்டம் 2015ஆம் ஆண்டு வரை தொடரும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் உறுதியளித்துள்ளது.
2007ஆம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் வரை சுமார் 3 ஆயிரத்து 500 இலங்கை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சில சிரேஷ்ட தளபதிகள் ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியில் பயிற்சிகளை பெற்றுகொண்டுள்ளனர்.
சர்வதேச பொலிஸ் பயிற்சியின் தரம் என்ற குறிக்கோளின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

**2007ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டுவரை சுமார் 3 ஆயிரத்து 500 இலங்கை பொலிஸ் அதிகாரிகள் பயிற்சிகளை பெற்றுகொண்டுள்ளனர்.**

இந்தத் திட்டமானது சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஒரு புதிய தலைமைத்துவ கொள்கையை முன்னேற்றமடையச் செய்யும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியின் கல்வி மற்றும் மேம்பாட்டு முன்னாள் தலைவர் புரூஸ் மிலின் தெரிவித்துள்ளார்.
அத்துடன் பொதுநலவாய விளையாட்டுக்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கியமான தலைமைத்துவ பங்கினைவகிப்பது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருவர் இடமாற்றம்

கொழும்பு, ஓக.4
பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்ககோனின் அறிவுறுத்தலுக்கமைய இரண்டு பிரதி பொலிஸ் மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசத்தின் பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய வி.இந்திரா, பொலிஸ் தலைமையகத்தின் நலன்புரி நிலையத்தின் பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
அத்துடன் கொழும்பு தென் பகுதியின் பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய சுமித் எதிரிசிங்க, களுத்துறை மற்றும் பாணந்துறைக்கான பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம்: மூவர் கைதாகினர்

மட்டக்களப்பு, ஓக.4
அக்கரைப்பற்று வெள்ளப் பாதுகாப்பு வீதியில் கடந்த புதன்கிழமை இரவு 9.15 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட மூவரும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது நீதிபதி எச்.எம்.முஹம்மட் பஸீர் இம்மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
அக்கரைப்பற்று வெள்ளப் பாதுகாப்பு வீதியில் கடந்த புதன்கிழமை இரவு இரு தரப்பினருக்கும் இடையில் நடந்த மோதலில் நபர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்கானார். அதனையடுத்து இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயமடைந்தார்.
அம்பாறை மாவட்ட புலனாய்வு பணியக அதிகாரிகள், அக்கரைப்பற்று பொலிஸார், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய இரகசிய தகவல் பிரிவு என்பன மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போதே மூவரும் கைதாகியுள்ளனர். (ற)

## விதிமுறைகளை மீறிய அமைச்சர்



யாழ்ப்பாணம், ஓக.4
நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் மேர்வின் சில்வா தனது பரிவாரங்களுடன் நல்லூர் ஆலயத் துக்குச் சென்றிருந்தார். வீதிகள் மூடப்பட்டிருந்த சமயம் கோயில் வாசல் வரை அவர்களது வாகனங்கள் சென்றன. அமைச்ச ரும் அவருடன் வந்தவர்களும் கோயில் வீதியில் பரப்பப்பட்டிருந்த வெண்மணலில் தமது பாதணிகளுடன் உலா வந்தனர்.
நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, அந்தப் பகுதியில் உள்ள வீதிகள் மூடப்பட்டு, பொதுமக்களின் பாவனைக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரையே அந்த வீதிகள் ஊடாக வாகனங்கள் பயணிக்க முடியும் என்ற நடைமுறை கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுகின்றது. அத்துடன், பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்வதற்காக ஆலயத்தைச் சூழப் பரப்பப்பட்டுள்ள வெண் மணலில் பாதணிகளுடன் நடக்க வேண்டாம் என்றும் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவை பொதுமக்களால் மீறப்படும்போது அங்கு கடமையில் இருக்கும் பொலிஸாரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.
இந்த நிலையிலேயே அமைச்சரும் அவரது பரிவாரங்களும், வீதிகள் மூடப்பட்டிருந்த சமயம் கோயில் வாசல் வரை தமது வாகனங்களைக் கொண்டு சென்றதுடன், பரப்பப்பட்ட வெண்மணலில் பாதணிகளுடன் உலாவந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் மாநகர சபையைச் சேர்ந்தவர்களும், அங்கிருந்த பொலிஸாரும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்காது பார்வையாளர்களாக இருந்தனர். (ற-14)

## தீ விபத்தால் இரு கடைகள் நாசம்

கொழும்பு, ஓக.4
மஹரகம பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் இரு வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன.
நேற்று முற்பகல் 10 மணியளவில் பரவிய தீ கோட்டே மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு, தெஹிவளை-கல்கிசை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்புடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## ஐ.நாவின் பட்டியலில் ஜனாதிபதி பெயர் இணைப்பு



கொழும்பு, ஓக.4
ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் உலகத் தலைவர்களின் உத்தேச பட்டியலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாளில் ஜனாதிபதி உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இரண்டாம் நாளில் ஈரான் மற்றும் பாகிஸ் தான் ஆகிய நாடுகளினதும் தலைவர்கள் உரையாற்றவுள்ளனர். அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமாவும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் ஆரம்ப தினத்தில் உரையாற்றவுள்ளனர். (ற)

## இருண்டு போயுள்ள இலங்கையில் வெளிச்சத்தை ஏற்படுத்துவோம்

### ரணில் விக்கிரம சிங்க கூறுகின்றார்

கொழும்பு, ஓக.4
அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது என்று கூறப்படும் தேர்தலில் எமக்கு வாக்களிப்பீர்களானால் இருண்டு போயிருக்கும் இந்த நாட்டை வெளிச்சத்துக்கு கொண்டுவருவோம் - என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.
ஹங்குரான்கெத்த என்ற இடத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



"நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மஹிந்த தலைமையிலான 9 வருட ஆட்சியில் மிகச் சிறிய மாற்றமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைமையை எங்களால் மாற்றமுடியும். இருண்டயுகத்திலிருந்து நாட்டை மீட்க ஆட்சி மாற்றமே தேவை. அது ஐக்கிய தேசியக் கட்சி அரசால் மாத்திரமே முடியும். ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த தேர்தலில் நீங்கள் எங்களை தேர்வு செய்தால், விலைவாசி உயர்வு, வாழ்க்கை பிரச்சினை போன்ற அனைத்தையும் தீர்க்க முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## காத்தான்குடி துப்பாக்கிச் சூட்டின் 24ஆவது ஆண்டு நினைவு தினம்



காத்தான்குடி, ஓக.4
காத்தான்குடி பள்ளிவாசல்களில் 1990ஆம் இடம்பெற்ற துப்பாக்கீச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த 103 முஸ்லிம்களினதும் 24ஆவது ஆண்டு நிறைவு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.
காத்தான்குடி ஹுஸைனியா மற்றும் மீரா ஜும்ஆ பள்ளிவாசல்களில் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ம் திகதி புனித இசாத் தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். 265 பேர் படுகாயமடைந்தனர். (ற-10)

## இலங்கையில் நடக்கும் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்பது உறுதி

### சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு

புதுடில்லி, ஓக.4
இலங்கையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு மாநாட்டில் நிச்சயமாக பங்கேற்பேன் என்று தெரிவித்துள்ளார் ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி.
மதுரையில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
குறித்த மாநாட்டுக்கு இலங்கையின் இராணுவத் தளபதி தம்மை அழைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ள சுவாமி, ஓகஸ்ட் 18 முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு இந்திய இராணுவ அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.
ஆயினும் இந்த மாநாட்டில் பங்கேற்கக்கூடாது "என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி, மறுமலாச்சி திராவிட முன்னேற்ற கழக செயலாளர் வைகோ ஆகியோர், பிரதமரிடம் கோரியுள்ளனர் என்றும், இது தொடர்பில் சென்னை மேல் நீதிமன்றத்தில் ஒருவர் மனுதாக்கல் செய்துள்ளார் என்றும் சுவாமி அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# உதயன்

விலை ரூபா 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2047 ஆடி 19 திங்கட்கிழமை (04.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 251


# இலங்கைக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன தமிழகத்தில்

## ‘சிறீலங்கன் எயர்லைன்ஸ்’ அலுவலகம் சென்னையில் அடித்து நொருக்கப்பட்டது

சென்னை, ஓகஸ்ட் 4

**தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை அவமதிக்கும் வகையில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையை அடுத்து தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராகப் பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.**



இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவமதிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கட்டுரை மற்றும் அதனுடன் இணைந்த ஒளிப்படம் என்பன தமிழகத்தில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. அங்கு ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையை அடுத்து, பதிவேற்றப்பட்ட 6 மணி நேரத்திலேயே அந்தக் கட்டுரையை நீக்கியதுடன், இந்தியப் பிரதமரிடமும், தமிழக முதலமைச்சரிடமும் பாதுகாப்பு அமைச்சு பரந்தளவிலான பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தது.

மன்னிப்புக் கோரப்பட்ட போதும் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள் தமிழகத்தில் தொடர்கின்றன.

திருச்சியில் உள்ள ‘சிறீலங்கன் எயர்லைன்ஸ்’ விமான நிறுவனத்தின் பணியகம், நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை கேவலப்படுத்தி பாது

(17 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தூதரகத்தை மூடுமாறு திரையுலகம் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.4

தமிழர்களின் உணர்வுகளையும், தமிழக முதல்வரையும் இலங்கை அரசு கொச்சைப்படுத்தியுள்ளது. அதனால் தமிழகத்தில் உள்ள இலங்கை இலங்கை துணைத் தூதரகத்தை உடனடியாக மூட வேண்டும் - இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ள திரையுலகத்தினர், அதை வலியுறுத்தி இன்று முற்பகல் 10 மணிக்கு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் விக்ரமன், பொதுச் செயலாளர் ஆர்.கே.செல்வமணி ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களையும், வாழ்வையும், பாதுகாத்து வரும் முதல்வர் ஜெயலலிதாவை இலங்கை அரசு உள் நோக்கத்துடன் ஆபாசமாக சித்தரித்து அவமானப்படுத்தியுள்ளது. எல்லா பாதிப்புக்களையும் ஏற்படுத்திவிட்டு, தற்போது நிபந்தனை அற்ற மன்னிப்பு என்ற போர்வைக்குள் மறைந்து கொள்ள முயற்சிக்கிறது.

இலங்கை அரசு தற்போது மட்டுமல்ல, ஈழத்தமிழர்களின் உரிமை மற்றும் வாழ்க்கை ஆகியவற்றை பாதுகாக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து போராடும் போதெல்லாம் அதை குற்றஞ்சாட்டுவதையோ, கேவலப்படுத்து

(17 ஆம் பக்கம் பார்க்க)

## 7 மாதங்களில் வவுனியாவில் 18 பேர் தற்கொலை

கொழும்பு, ஓக.4

வவுனியா மாவட்டத்தில் கடந்த 7 மாதத்தில் மட்டும் 18 தற்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும், கடந்த ஜனவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் 14 ஆண்களும் 4 பெண்கள் அடங்கலாக 18 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவிதுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் இரு ஆண்களும், பெப்ரவரி மாதத்தில் ஒரு ஆணும், மார்ச் மாதத்தில் இரு ஆண்களும் ஒரு பெண்ணும், ஏப்ரல் மாதத்தில் இரு ஆண்களும், மே மாதத்தில் நான்கு ஆண்களும், ஜுன் மாதத்தில் இரு ஆண்களும், ஜுலை மாதத்தில் மூன்று பெண்களும் ஒரு ஆணுமே இவ்வாறு தற்கொலை செய்துள்ளனர்.

குடும்ப தகராறு, காதல் பிரச்

(17 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா குறித்த கட்டுரை விடயம் ராஜதந்திர விளைவை ஏற்படுத்தலாம்

### கொழும்பு ஆங்கில வார இதழ் கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஓக.4

பாதுகாப்புஅமைச்சின்இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவையும் கேவலப்படுத்தும் வகையிலான கட்டுரை மற்றும் ஒளிப்படம் என்பன இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சேனாலி வாதுகே என்பவரால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தரக்குறைவான கட்டுரை என்று இந்தியா தெரிவித்த எதிர்ப்பை அடுத்து, பாதுகாப்பு அமைச்சு அதனை நீக்கியதுடன், நிபந்தனையற்ற மன்னிப்பையும் கோரியது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, வெளிவிவகார அமைச்சின் செயலர் சேனுகா செனிவிரத்னவிடம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த பின்னரே, பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் மன்னிப்புக் கோரப்பட்டது.

இது தரக்குறைவான கட்டுரை என்று புதுடில்லி குறிப்பிட்டுள்ளமை, இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது. அடுத்த மாதம், நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்துப் பேசலாம் என்று எதிர்பார்க்கப்படு

(17 ஆம் பக்கம் பார்க்க)

## தீவிரவாதத்துடன் தொடர்புடைய இலங்கையரை விசாரியுங்கள்

### இலங்கையிடம் கோருகிறது இந்தியா

புதுடில்லி, ஓக.4

தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இலங்கையர்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்துள்ளதுடன், பாகிஸ்தானுடன் இணைந்து இந்தியாவுக்கு எதிராக சில இலங்கையர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறு செயற்படும் நபர்கள் தொடர்பிலும் அவர்களது பின்னணி தொடர்பிலும் உரிய விசாரணை நடத்துமாறு இந்தியா, இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக பொது நிர்வாக அமைச்சிடம் உத்தியோகபூர்வமான கோரிக்கையும் விடுத்துள்ளது என்று தெரியவருகின்றது.

பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையர்களைக் கொண்டு இந்தியாவில் உளவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விடயங்கள் குறித்து இந்தியாவின் தேசிய புலனாய்வுப் பணியகம் தன்னிடமுள்ள விவரங்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. விசாரணை நடத்துமாறு, 25 விடயங்கள் அடங்கிய ஓர் கடிதத்தையும் அனுப்பி வைத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் அடிக்கடி இலங்கையிருந்து இந்தியாவுக்கு பயணம்

(17 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் கட்சியை போன்று பா.ஜ.கவை எண்ண வேண்டாம்

### பொன்.இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 04

காங்கிரஸ் அரசைப்போல் தற்போதைய மத்திய அரசை நினைக்க வேண்டாம். தவறு நடந்தால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம் இவ்வாறு இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன்.

சென்னையிலுள்ள தமிழக பா.ஜ.க. அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"இராமேஸ்வரம் மீனவர்களுக்கு நான் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில், அவர்களது போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் சிறைப் பிடிக்கப்பட்டுள்ள 94 மீனவர்களும், 63 படகுகளுடனும் இன்னும் 10 நாள்களில் மீட்கப்படுவார்கள். மீனவர் பிரச்சினை தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் பேசியுள்ளேன். இராமேஸ்வரம் மீனவர்களை டில்லிக்கு அழைத்துச் சென்று சுஷ்மா சுவராஜை சந்திக்கவுள்ளேன். தமிழக மீனவர்களின் நலனை காப்பதற்காக நிரந்தர தீர்வு ஏற்படும் வகையில் மத்திய அரசு செயற்படும். மேலும் கச்சதீவை மீட்கும் விடயத்தில் சட்டசிக்கல்கள் உள்ளன. அவை எதிர்காலத்தில் களையப்படும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடியியல் பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 4

வடக்கு மாகாண மீன்பிடியியல் பணிப்பாளர் பதவி வெற்றிடம் நேர்முகத் தேர்வினூடாக விரைவில் நிரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களில் இந்த வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளபோதும் வடக்கில் மாத்திரமே இந்த வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது.

மாகாண அரசுகளின் கீழ் நன்னீர் மீன்பிடி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குரிய தொழில்நுட்ப - துறை சார் - அலுவலர் பதவியாக, ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண மீன்பிடியியல் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இந்தப் பதவி நிரப்பப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை

(17 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தைக்கு வரி வசூலிப்பாளர் பதவிகளை உருவாக்குக

### சபை உறுப்பினரால் தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பு

தென்மராட்சி, ஓக.4

சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சந்தைக்கு மீண்டும் வரி வசூலிப்பாளர் பதவிகள் உருவாக்கப்படல் வேண்டும் என்று நகர சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சனால் தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

பொதுச் சந்தையில் கடந்த 1940 ஆம் ஆண்டு அப்போதைய கிராமச் சங்கத் தலைவராக இருந்த வல்லிபுரம் என்பவரால் சந்தை குத்தகைக்கு கொடுக்கும் முறை ஒழிக்கப்பட்டு வரி வசூலிப்பாளர்கள் மூலம் சந்தைக்கு வரும் பொருள்களுக்கு வரி அறவிடும் நடைமுறை கொண்டு

(17 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகளின் ஆதரவாளர் ரணில்

## குற்றஞ்சாட்டுகிறார் மேல்மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில

கொழும்பு, ஓக.4
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் விடுதலைப் புலி ஆதரவாளராக செயற்பட்டு வருகின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில.



ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தரும், மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில நேற்றுமுன்தினம் கொழும்பில் தனியார் நிகழ்வொன்றில் கலந்து கொண்டார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

"2001 மற்றும் 2003 ஆண்டுகளில் இந்த நாட்டையே காட்டிக் கொடுக்கும் அளவுக்கு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தார். அவரது துரோகங்களை இலகுவில் மறந்துவிடவோ, மன்னிக்கவோ முடியாது.

தற்போது கூட அவர் நாட்டு மக்களின் நலன் தொடர்பில் கவலைப்படுவதாக தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் நலன், இந்திய நலன் தொடர்பில் தான் அவர் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை இந்தியா தனது தூதுவராக வேறொருவரை இங்கு அனுப்பத் தேவையில்லை. அந்த விடயத்தை மிகச் சிறப்பாக ரணில் விக்கிரமசிங்க கவனித்துக் கொள்வார். இவ்வாறான நிலையில் நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக ரணில் வருவதென்பது கனவிலும் நடக்காது. 2021ம் ஆண்டு வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பதவியில் இருப்பார்.

அதிலும் ரணிலின் தலைமையில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்களில் படுதோல்வியையே சந்திக்கும். எனவே கௌரவமான தோல்வியைத் தழுவ வேண்டுமாயின் ரணிலின் தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஆஸி. சென்ற சிறார்கள் கடும் மன உளைச்சலில்

மெல்பேர்ன், ஓக.4
ஆஸ்திரேலியாவுக்கு அண்மையில் சென்றிருந்த அகதிச் சிறார்களில் பெரும்பாலானவர்கள் அதிக உச்ச மன அழுத்தத்துக்கு உட்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த தகவலை வெளியிட வேண்டாம் என்று, சர்வதேச மனநலவியல் மருத்துவர்களிடம் ஆஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் கோரி இருந்தார் என்று, ஆஸ்திரேலியாவின் உளவியல் மருத்துவர் பீற்றர் யங் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய சென்ற 157 பேரில் 50 பேர் சிறுவர்களாவர். அவர்கள் அனைவரும் யன்னல்கள் அற்ற அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இவ்வாறான கடுமையான சூழ்நிலைகளின் காரணமாக குறித்த சிறுவர்கள் அனைவரும் கடுமையான உளவியல் பாதிப்புக்கு உட்பட்டிருப்பதாக பீற்றர் யங் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த தகவல் வெளியாகும் பட்சத்தில், அவர்களை நவுரு தீவுக்கு அனுப்பும் தமது திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதால், குறித்த தகவலை வெளியிட வேண்டாம் என்று மருத்துவர்களிடம் அமைச்சர் ஸ்கொட் மொரிசன் வலியுறுத்தியுள்ளார்.

ஆயினும் இந்த குற்றச்சாட்டை ஸ்கொட் மொரிசன் மறுத்துள்ளார். (ற)

# ஏறாவூர் பொலிஸ் பிரிவில் மோட்டார் குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஓக.4
மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள செங்கலடியில் எட்டு மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணியளவில் இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், இராணுவ குண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்களைக் கொண்டு அவற்றைச் செயலிழக்கச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.


செங்கலடி - பதுளை வீதி கறுப்புப் பாலத்தடியில் நீண்ட காலமாக அமைந்திருந்த இராணுவ சோதனைச்சாவடி அமைந்திருந்த பகுதியிலேயே இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இவை பழைய குண்டுகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# சொத்து விவரங்களை கையளிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஓக.4
எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், தங்களின் சொத்து விவரங்களை வேட்பு மனுக்களுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரியுள்ளார்.

ஊவா மாகாண சபைக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இந்த மாதம் 6ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்த நிலையில் இந்த காலப்பகுதிக்குள் சொத்து விபரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வேட்பாளர்கள் தங்களின் பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையில் உள்ள பெயரை மாத்திரமே பயன்படுத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இது குறித்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ற)




# 4 வயதுச் சிறுவனைக் கடத்தி 1 கோடி ரூபா கப்பம் கோரியோர் கைது

கொழும்பு, ஓக.4
கல்கமுவ மீகலேவ பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வயது சிறுவன் ஒருவனைக் கடத்தி ஒரு கோடி ரூபா கப்பம் கோரிய நான்கு சந்தேக நபர்களை குற்றப்புலனாய்வினர் நேற்று கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்தக் கடத்தல் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்று 24 மணி நேரத்துக்குள் கடத்தப்பட்ட நான்கு வயது சிறுவனான தினிந்து யசேன் ஏக்கநாயக்க பாதுகாப்பாக மீட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்ய முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட சிறுவன் மீட்கப்பட்டமை தொடர்பில் தெளிவுபடுத்தும் முகமாக நேற்றுமுன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

"கடத்தல்காரர்கள் சிறுவனின் தந்தையை கடத்தும் நோக்கிலேயே வந்துள்ளனர். ஆனால், கடைசியில் தந்தையையும் தாயையும் தாக்கிவிட்டு தினிந்து யசேன் என்ற சிறுவனை கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்றே குறித்த சிறுவனை சந்தேக நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர். இவ்வாறு சிறுவனை கடத்திய சந்தேக நபர்கள் 29ஆம் திகதி சிறுவனின் தந்தையுடன் தொலைபேசி மூலம் கதைத்துள்ளனர். பின்னர் 30ஆம் திகதி சிறுவனின் தாயாருடைய தந்தையுடனும் (தாத்தா) கதைத்துள்ளனர்.

மீகலெவ – குணுபொலகம பிரதேச வியாபாரியின் 4 வயது மகனான தினிந்து யசேன் ஏக்கநாயக்க என்ற சிறுவன் கடந்த 27ஆம் திகதி கடத்தப்பட்டார். இந்தச் சிறுவன் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கல்கமுவ பிரதேசத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர்கள் சிறுவனின் தந்தையை விட தாத்தாவுக்கே அதிகமான தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். சிறுவனின் தாத்தா மிகுந்த செல்வந்தர் என்பதாலேயே அவருக்கு அதிகமான தொலைபேசி அழைப்புக்களை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்திய சந்தேக நபர்கள் முதலில் ஒரு கோடி ரூபா கப்பப் பணத்தை கோரியுள்ளனர். ஒரேயடியாக ஒரு கோடி ரூபா பணத்தை கொடுக்க முடியாது எனவும் முதலில் 35 இலட்சம் ரூபா பணத்தை வழங்குவதாக சிறுவனின் பெற்றோர் பொலிஸாரின் ஆலோசனைக்கமையக் கூறினர்.

பின்னர் பெற்றோர் பிள்ளையுடன் கதைக்க வேண்டுமென கோரியபோது அவர்களை குறித்த ஒரு இடத்துக்கு வருமாறு கூறி சிறுவனின் பஞ்சாயுதத்தை அந்தவிடத்தில் வைத்துவிட்டு பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடி சிறுவன் பாதுகாப்பாக இருப்பதாகவும் விரைவாகக் கப்பப் பணத்தை தருமாறும் கடத்தல்காரர்களால் கோரப்பட்டது.



இந்த சம்பவங்கள் இவ்வாறு தொடர ஆறு பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன், சந்தேக நபர்கள் பேசிய தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றை பெற்று தொழில்நுட்ப ரீதியிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறான தீவிர விசாரணையின் பயனாக சந்தேக நபர்கள் இந்தக் கடத்தலின் பின்னர் 7 'சிம் கார்ட்'களை பயன்படுத்தி சிறுவனின் பெற்றோருடன் கதைத்துள்ளமை தெரியவந்துள்ளது. அந்த 'சிம் கார்ட்'களையே அதிகமாக பயன்படுத்தி சந்தேக நபர்கள் சிறுவனின் பெற்றோரிடம் கதைத்துள்ளனர்.

குறித்த 'சிம் கார்ட்'களில் அநேகமானவை அவர்களது பெயர்களில் பதிவாகியிருக்கவில்லை. ஒரு 'சிம் கார்ட்' கொழும்பு பகுதியைச் சேர்ந்த நாட்டாண்மை ஒருவருடைய பெயரிலும் ஏனையவை வெவ்வேறு நபர்களுடைய பெயர்களில் பதிவாகியிருந்தமையும் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

'சிம் கார்ட்'களை விற்பனை செய்யும் சில நிறுவனங்கள் சரியாக அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் ஏற்கனவே 'சிம் கார்ட்'களை பெற்றவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகளை பயன்படுத்தி 'சிம் கார்ட்'களை விற்பனை செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது. அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வினர் மேற்கொண்ட சூட்சுமமான விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேக நபரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அந்தச் சந்தேக நபரின் உதவியுடன் ஏனைய சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேக நபர்கள் சிறுவனின் வீட்டிலிருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலைவில் 20 ஆயிரம் ரூபா மாத வாடகை அடிப்படையில் வீடொன்றை எடுத்து தங்கியிருந்து இந்தக் கடத்தல் திட்டத்தை வகுத்துள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், கையுறைகள், பிளாஸ்டர்கள், முகமூடி தொப்பிகள் மற்றும் கத்திகள் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் குறித்த வர்த்தகரின் வீட்டிற்கு வரன் ஒன்று பார்ப்பதற்கு வந்துள்ளார். அதன்போது பெருந்தொகையான பணம் சீதனமாகத் தருவதாகவும் சிறுவனின் தாத்தா கூறியுள்ளார். ஆனால் அந்த வரன் பின்னர் சரிவரவில்லை.

குறித்த வர்த்தகரிடம் பெருந்தொகையான பணம் இருப்பதை அறிந்து கொண்ட சந்தேக நபர், அப்போதிருந்தே அவரிடம் கொள்ளையடிப்பதற்குத் திட்டம் தீட்டியுள்ளார். அதனடிப்படையிலேயே கடந்த மாதம் குறித்த பிரதேசத்தில் வாடகைக்கு வீடொன்றை வாங்கி நண்பர்களுடன் தங்கியுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்து விசாரித்து வருகின்றனர்"-என்று தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது கடத்தற்காரர்களிடமிருந்து மீட்கப்பட்ட சிறுவன் மற்றும் அச்சிறுவனுடைய தாய், தந்தை ஆகியோரும் அங்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். (ற)



இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு பொலிஸாரால் பாதுகாப்பாக மீட்கப்பட்ட தினிந்து யசேன் ஏக்கநாயக்க, அவரது பெற்றோருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று ஞாயிற்றுக்கிழமை அலரிமாளிகையில் சந்தித்தான். அந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் ஆகியோர் உடனிருந்தனர். சிறுவனின் நலன் குறித்து அவரது பெற்றோரிடம் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

# கூட்டுறவுத்துறை அபிவிருத்திக்கு நவீனத்துவ ஆலோசனை அவசியம்

## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக.4

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கூடுதலான வெளிக்கள உத்தியோகத்தர்களைக் கொண்ட திணைக்களமாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் உள்ளது. எனவே இந்தத் துறையில் வளர்ச்சி காண்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உருவாக்கப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை கூட்டுறவு உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களின் பணி மேம்பாடு மற்றும் புதிய கூட்டுறவுக் கொள்கை அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மாகாணத்தில் உள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்து வழிநடத்தி அவற்றுக்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில் கடந்த காலச் சூழ்நிலையில் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி பல கஷ்டங்களுக்கு மத்தியில் தமது சேவையை ஆற்றி வந்தார்கள், வருகிறார்கள்.

எனவே கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கங்களை மேற்பார்வை செய்யும் போது அவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கூட்டுறவின் வளர்ச்சியில் திணைக்களம் சார்ந் தவர்கள் உள்ளனர்.

ஏனைய மாகாணங்களையும் விட இக்கட்டான நிலையில் இருந்தாலும் எமது சங்கங்களில் பல இலாபகரமாகத்தான் இயங்கி வருகின்றன. இன்றைய போட்டிப்பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு சங்கங்களை நவீனத்துவமாக மாற்ற வேண்டிய அவசியமும் உள்ளது.

கூட்டுறவை சரியான முறை யில் வழிநடத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிறந்த ஆளுமையுடன் காலத்துக்கு ஏற்ப ஆலோசனைகளை கூட்டுற வுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ் வேறுவிதமான நடை முறைகளைப் பின்பற்றி வருகின்றன. இவையும் வளர்ச் சிக்கு தடையாகவுள்ளன. ஆனால் ஏனைய மாகாணங்களில் சங்கங்கள் ஒருமித்த நடைமுறைகளைப் பின்பற்றுவதால் வளர்ச்சி கண்டு வருகின்றன. இறுக்கமான கட்டுப் பாடுகள் ஊடா கவும் சட்ட நுட்பங்களையும் பின்பற்றுவதன் ஊடாகவும் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். எனவே இந்தத் துறையை அபிவிருத்தி செய்ய உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்று நவீனத்துவமான ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன், முதலமைச் சரின் செயலாளர் சி.திருவா கரன், வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் திணைக்களப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14)



நல்லூர் முருகன் மூன்றாம் நாள் திருவிழா

## தொழுதிடுவோம் சரணம்

இராகம்:- பிலகரி,
தாளம்:- ஆதி

பல்லவி

தில்லைச் சிவன் மைந்தா திருமுருகா
நல்லைப் பதியுறை நாயகனே

அனுபல்லவி

தித்திக்கும் உன் நாமம் தேனாகுமே
முத்திக்கு வழி காட்டும் திருவருளே

சரணம்

கல்லினை ஒத்த மனம் கசிந்துருக காட்சி தரும்
வல்வினை அகற்றிடவே மாமயில் மீதேறி
தொல்லை வினை தீர்க்க தோன்றிடும் குமரேசா - நின்
சரணமடி சரணமென தொழுதிடுவோம் சரணம்

*சுபாஷினி பிரணவன்*

## எமைக் காக்க மயிலேறிவா

நல்லூரில் வீற்றிருக்கும் எங்கள் குமரா - எங்கள்
நலம் காக்க மயிலேறி வீதி வருவாய்
நானிலமும் கூடி நிற்கும் உந்தன் மடியில் - நல்
நாதஸ்வரம் பாட்டிசைக்க கூடி வருவாய்

போதும் போதும் என்றினைக்க அள்ளி வருவாய் - பக்தர்
புடைசூழ நெரிவதைக் கண்டு இரசிப்பாய்
அலங்காரப் பெண்களுடன் கூடி வருவாய் - அவர்
அழகினைக் கவர்ந்திழுத்துப் பார்க்க வைப்பாய்

அழகே உன்னழகை யார் தந்தது - உன்
புன் சிரிப்பு எங்கிருந்து ஒட்டிக் கொண்டது
தெவிட்டாத இன்னமுதே நல்லூரா- நீயும்
தேடி வந்து காத்திடலும் எந்தன் நாதா

*மலர் சின்னையா*

## ஆறுதல் தந்திடு கந்தா

ஞானக் குழந்தையாம் நல்லூர் கந்தா - உனை
நா உருகிப் பாடிடவே தினம் கோடி கோடியாய் பக்தர் குழாம்
கும்பிட வரம் அளிப்பாய் நாடியே நிற்கும் எமக்கு
நல்வினை தந்திடப்பா
சோதனை வேதனை எல்லாம்
சொல்லித் தீராதப்பா ஆறுதல் தந்திட உன்
சேவடியை காண வந்தோம் வாடிய எமக்கெல்லாம்
கோலமயில் தனில் வலம் வந்து
கோடி நன்மை தந்திடுவாய் - குமரா!

*ஷீ. நிலாணி, ஏழாலை*

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் திருவிழாக் காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும்' என்ற தலைப்பில் இந்து தர்மாசிரியர் த.மனோஜ்குமாரின் சிறப்புச் சொற்பொழிவும், யாழ். வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப் பாடசாலை, யாழ். நாச்சிமார் கோயிலடி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அறநெறிப் பாடசாலை மற்றும் கொக்குவில் ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-ரி)

★★★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு-

யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவிகளின் குழுப் பாடல் நிகழ்வு இடம்பெறும். ற.சங்கீதவாணி, மு.அனுசித்ரா, ஜீ.பிரபாலினி, கா.நிசேதனா, சி.மதுசா ஆகியோர் பங்குபற்றுவர். வயலின் - செல்வி ரா.பிரசாந்தி, மிருதங்கம் - ஏ.அமிர்த சிந்துஜன்.

தொடர்ந்து பாடல்- செல்வி எஸ்.சிவானுஜா, வயலின்- கே.குகபரன், மிருதங்கம் - எஸ்.அகிலன் ஆகியோரது இசையரங்கம் இடம்பெறும். (ஒ-ரி)

★★★

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும் இசையரங்கில் இன்று மாலை 7 மணிக்கு-

பாடல் - செல்வி ஹம்ஷத்வனி கோபாலசர்மா, வயலின் -திருமதி சௌ.தெய்வீகசௌந்தர் ராஜன், மிருதங்கம்- பிரம்மஸ்ரீ எஸ்.வரதராஜ சர்மா. (ஒ)

★★★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று மாலை 5.30 மணி முதல் 9 மணி வரை தெய்வீக இசை விருந்து நிகழ்வு இடம்பெறும். இந்தியாவின் மங்களூரில் இருந்து வருகை தந்துள்ள சகோதரர்களான காமகோடி பீட ஆஸ்தான வித்துவான் பி.கே.கணேஷ், பி.கே.தாமோதர் மற்றும் ஈழத்து தவில் வித்துவான்களும் இசை விருந்து வழங்குவர்.

## ஆலோசனைக் கூட்டம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் மணிவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை கலாசாலையில் இடம்பெறவுள்ளது. இந்த விழா ஏற்பாடுகள் தொடர்பில் அதிபரின் பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தருமாறு மணி விழாக் குழுவினர் கோரியுள்ளனர். (ஒ)




சங்கானை
செங்கற்படை
மகாதேவப்
பிள்ளையார்
தேவஸ்தானம்
நான்காம்
திருவிழா

கரணங்கள் மூன்றும் உன் திருவடியில் அடைவாய் திகழ
சரண் நமக்கு என்றும் உன் பதமே என இயல்பாய் பாலித்தே
கரணங்கள் பல இட்டு அங்கங்கள் தான் உருட்டி வந்திக்க
அரன் அங்கு ஆவான் ஆனைமுகன் அடியார்க்கு நாலாம் போதில்
ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
க. இராமலிங்கம் குடும்பம்
4 ஆம் திருவிழா உபயகாரர், தொட்டிலடி, சங்கானை.
(15138)(6-6)

இடமாற்றத்தை முன்னிட்டு.....




யாழ் மாநகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு
சில தினங்கள் மட்டுமே.
பட்டு சாறிகள்
சீகுன் சாறிகள்
ஸ்ரோன் சாறிகள்
சல்வார்கள்
இந்தியன் ரொப்
சேட்
ஜீன்ஸ்
மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும்
குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(50542)(7.6.3)



சேவை நலன் பாராட்டு

எமது பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றி
ஓய்வுபெற்று செல்லும்
திருமதி
ஓங்காரலட்சுமி ஜெகதீசன்

சேவை விவரம்

ப/ஊவா ஹைலண்டஸ் தமிழ் வித்தியாலயம் 14.12.1987-31.12.1989
யா/பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை 01.01.1990-31.12.1991
ப/ஊவா ஹைலண்டஸ் தமிழ் வித்தியாலயம் 01.01.1992-28.02.1995
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் 01.03.1995-30.09.1995
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி. 01.10.1995-24.01.1999
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் 25.01.1999-22.03.1999
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை 23.03.1999-02.05.2010
யா/பெரியபுலம் ம.வி 03.05.2010-01.08.2014

ஓய்வுகாலத்தில் எல்லா நலன்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
ஆசிரியர் கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
(50551)(7.6.3)




திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்.
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016 / 021 568 9090

# எழுத்தாளர் சாரல்நாடனின் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம்

கொழும்பு, ஓக.4
மலையக இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கலா பூஷணம் சாரல்நாடன் (சி.நல்லையா) மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரின் மறைவு தமிழ் இலக்கியத்துறைக்கு மாத்திரமல்ல, நாட்டின் ஒட்டு மொத்த இலக்கியத் துறையிலும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
சாரல்நாடனின் மறைவு குறித்த ஜனாதிபதியின் அனுதாபச் செய்தியில்-
நாட்டின் ஒட்டுமொத்த இலக்கியத்துறையின் முன்னேற்றத்துக்கு மலையக இலக்கியத்துறையும் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது. அதில் காலஞ்சென்ற சாரல் நாடனின் கணிசமான பங்களிப்பு இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.
அரசு அவரது இலக்கிய சேவையைப் பாராட்டி கலாபூஷணம் விருது வழங்கி கௌரவித்தது.
அதேபோல் இந்தியாவின் ஆக்ராவில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற சார்க் இலக்கிய திருவிழாவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அவர் கலந்து கொண்டு நாட்டுக்கும் தமிழ் இலக்கியத் துறைக்கும் பெருமை சேர்த்தார்.
அன்னாரின் மறைவால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினருக்கும், அவரது சக இலக்கியத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்- என்றுள்ளது.
இதேவேளை சாரல் நாடனின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றன. (ஒ)

# விசேட தேவையுடைய இராணுவத்தினரால் வருடத்துக்கு 18 கோடி ரூபா வருமானம்

கொழும்பு, ஓக.4
விசேட தேவையுடைய 1500 இராணுவத்தினர் இராணுவ சீருடை தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் அரசுக்கு வருடாந்தம் 18 கோடி ரூபா வருமானம் கிடைப்பதாக பாது காப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டதன் கராணமாக விசேட தேவையுடையோராக மாற்றப்பட்ட 1500 இராணுவ வீரர்கள் யக்கலையில் இயங்கும் ஆடைத் தயாரிப்பு நிலையத்தில் இராணுவ சீருடைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
இதன்காரணமாக அரசாங்கம் இராணுவ சீருடைகள் கொள்வனவு செய்ய வருடாந்தம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் 18 கோடி ரூபாவை மிச்சம் பிடிக்கக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
விசேட தேவையுடைய படையினரைப் பயன்படுத்தி இராணுவ சீருடைகள் தயாரிக்கும் திட்டம் 1996 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் 2009 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் சிறப்பாக இயங்குகின்றது.
இங்கு ஆடைத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள படையினருக்கு அவர்களின் சம்பளத்துக்கு மேலதிகமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.
இலங்கை பாதுகாப்பு படையினருக்குத் தேவையான சீருடைகளில் 60 சதவீதமானவற்றை இந்த நிறுவனம் உற்பத்தி செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (வ)



*இராணுவ சீருடை தயாரிப்பில் ஈடுபடும் விசேட தேவையுடைய படையினர்.*



*ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டபோது...*

# ஹற்றனில் ரணில்

கொழும்பு, ஓக.4
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று ஹற்றனுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.
ஜனஜய கிராம விழிப்புணர்வு நிகழ்வுக்காக பயணம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் முற்பகல் 10 மணிக்கு ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகளில் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார்.
அதன்பின் ஹற்றன் நகரில் சகல வியாபார நிலையங்களுக்கும் பயணம் செய்து அங்கத்துவ இணைப்புப் பற்றிய திட்டம் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்தார்.
அத்தோடு ஐக்கிய தேசிய கட்சி அங்கத்தவர்கள் மற்றும் பிரதேச அமைப்பாளகளுடான கலந்துரையாடல் ஒன்று முற்பகல் 11 மணியளவில் ஹற்றன் டி.கே.டபிள்யூ. மண்டபத்தில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் கே.கே. பியதாஸ மற்றும் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் ரவீந்திரன் உட்பட கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அனைத்து உள்ளுராட்சி மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (வ)

# பாலியல் உணர்வைத் தூண்டக் கூடிய மருந்தை பயன்படுத்திய நால்வர் சாவு

## மருத்துவரின் பரிந்துரை இல்லாததால் அவலம்

கொழும்பு,ஓக.4
பாலியல் உணர்வைத் தூண் டிவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மருந்தொன்று நாடு முழுவதிலும் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்று அதனைப் பாவித்த நால்வர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்றும் வாசனைத் திரவியங்கள் மற்றும் மருந்துகள் அதிகார சபையால் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலமாகத் தெரிய வந்துள்ளது.
இவ்வாறு சபையின் தலைவரும், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளருமான மருத்துவர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். இந்த மருந்தைப் பயன்ப டுத்தும் தரப்பினரிடையே பாடசாலை மாணவர்களும் அடங்கியுள்ளனர்.
பாலியல் உணர்வைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் இந்த மருந்தை மருத்துவ ஆலோசனைகளின் பிரகாரமே மருந்துக் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
ஆனால் மருத்துவரின் பரிந்துரை இல்லாது இதை வாங்கிப் பயன்படுத்துவதால் பாரிச வாதம் போன்ற உறுப்புக்கள் செயலிழக்கும் நிலை. இதயத் துடிப்பு அதிகரித்தல் மற்றும் உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படக் கூடுமென்பதோடு உயிரிழப்புக்களும் ஏற்படலாம்.
மேலும் இதைத் தொடர்ச்சியாகப் பயன் படுத்துவதால் மேலும் பல பக்கவிளைவுகள் ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.
மருத்துவ ஆலோசனையின்றி இந்த மருந்தைப் பயன்படுத்திய நால்வர் உயிரிழந்துள்ளனர் என்றும் மருத்துவர் ஒருவரின் பரிந்துரை இன்றி இந்த மருந்தை விற்பனை செய்த மருந்தகங்களின் உரிமையாளர்களான பத்துப் பேர் அண்மையில் மேற்படி சபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ள தோடு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-22)


## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 25 04 1935



உதிர்வு 15 08 2013

### செல்லையா பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வரிமதிப்பாளரும்,முன்னாள் சர்வதேச கிரிக்கட், காற்பந்தாட்ட நடுவரும்,மெய்வல்லுனர் போட்டிகளின் பிரதம நடுவரும் ஆரம்பிப்பாளரும் )

திதி : வளர்பிறை நவமி - 04.08.2014

பொன்னார் திருவதனம் பூவுலகை பிரிந்திடினும்
புன்னகை புரிவதன பதிவுகள் புதைவுறுமா?
துன்னியார் போற்றிட துடுப்பாட்ட நடுவராகி
தரணிபுகழ் அணிகளுக்கு தீர்க்கமிகு தீர்வளித்து
நன்னயம் நன்காற்றி நல்லுயர் பதவிநாட்டி
நயமொடு நல்லறம் நலம்பேணி நனிதிலங்கி
பென்னைமுக பெருமான் பதமலர் பொருந்திய
பெருந்தகை பொன்னாவை பிரியமொடு நினைந்திடுவோம் !
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இல.133 1/1 ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை
கொள்ளுப்பிட்டி, கொழும்பு - 03
தொ.பே : 011 2437113

நெஞ்சகலா நினைவுடன்
குடும்பத்தினர்



## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

அச்சுவேலியூர்
அமரர்
ஆறுமுகம் லோகேஸ்வரன்
(இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி)

ஆண்டவன் படைப்பு 12.03.1932
அநியாய அழிப்பு 14.08.1994

திதி: 04.08.2014

ஏவிய கொடிய ஷெல்லும் எமனாகிப் போனதனால்
ஆவி உடலைவிட்டு ஆண்டு இருபதாகியதோ?
பாவியர்கள் நாமிங்கு பரிதவித்து ஏங்கி நின்று
கூவி அழைக்கின்ற குரல்தான் கேட்கிறதோ?

தேடும் நெஞ்சங்கள்
மனைவி, மகள், மகன்,
மருமகன், மருமகள், பேரக்குழந்தைகள்.
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.





## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
பரமநாதன் குகதாசன்
(Retired Physiotherapist)

மலர்வு 05.04.1937
உதிர்வு 05.07.2014

என்றும் எம்வாழ்வில்
நல்வழிகாட்டியாய் இருந்து
எல்லோரது உள்ளங்களிலும்
இன்றும் நிலைத்திருக்கும்
உங்கள் அன்பை நன்றியுடன்
நினைவு கூருகின்றோம்.

106, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(50500)(7.63)



## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



ஸ்ரீமதி சரஸ்வதியம்மா தேவராஜசர்மா

நிகழும் ஜய வருஷம் ஆடி மாதம் 11ஆம் நாள் (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் பற்றிய எமது தாயார் ஸ்ரீமதி சரஸ்வதியம்மா தேவராஜசர்மா அவர்களின் தசாக கிருஹயக்ஞம் வரையிலான நிகழ்வுகள் பின்வரும் தினங்களில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளன.

* ஆடி 19ஆம் நாள் (04.08.2014) திங்கட்கிழமை காலை 8.00 மணி தசாகம்.
* ஆடி 20ஆம் நாள் (05.08.2014) செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
* ஆடி 21ஆம் நாள் (06.08.2014) புதன்கிழமை சபிண்டீகரணம்
* ஆடி 22ஆம் நாள் (07.08.2014)வியாழக்கிழமை கிருஹயக்ஞம், சமாராதனை (மதியபோசனம்)

மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகள், பிரார்த்தனை, சமாராதனை (மதியபோசனம்) நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை.
021 373 7637/077 703 3360 (50497) (12.3.6)

திருமதி பாலச்சந்திரசர்மா,
(குடும்பத்தினர்)




இரு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஜேர்மனியில் 35 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர். பயணிகள் ரயில் ஒன்றும், சரக்கு ரயில் ஒன்றுமே விபத்துக்குள் ளாகியுள்ளன. விபத்தில் பயணிகள் ரயிலிலின் 5 பெட்டிகள் தடம்புரண்டன. காயமடைந்தவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரி விக்கின்றன. (ற)

## ரஷ்யாவுடனான நேட்டோ உறவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

### பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கோரிக்கை

லண்டன், ஓக.4

ரஷ்யாவுடனான நேட்டோவின் நீண்ட கால உறவை மறுபரிசீலனை செய்வது அவசியம். எந்தவிதத்தில் பதற்றம் ஏற்பட்டாலும் அதற்கு விரைவில் பதிலடி கொடுக்க அதன் கூட்டணி நாடுகளின் திறனை வலுப்படுத்த வேண்டும் - இவ்வாறு கோரியுள்ளார் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன்.

இது தொடர்பாக நேட்டோ அமைப்பின் பொதுச் செயலர் ஆண்டர்ஸ் ஃபோக் ராஸ்மியூசன் மற்றும் அந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள 27 நாடுகளின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நேட்டோ அமைப்பானது வேகமாகக் குவிக்கக்கூடிய முப்படைகளின் பலத்தையும், சிறப்பு நடவடிக்கைப் படையின் பலத்தையும் அதிகரிக்க வேண்டியது அவசியம். இந்த ஆண்டில் (2014), உலகில் அடுத்து என்ன நிகழும் என்பதை கணிக்க முடியாத் நிலை உள்ளது. நேட்டோ கூட்டணி வரலாற்றில் மற்றொரு முக்கிய தருணத்தை நாம் சந்திக்கிறோம். வட ஆபிரிக்காவில் இருந்து திசாஹெல் முதல் சிரியா, ஈராக் வரையிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் ஸ்திரமற்ற தன்மை நீடித்து வருகிறது.



எனவே, இதுபோன்ற அச்சுறுத்தலை தடுப்பதற்கும், நேட்டோ உறுப்பு நாடுகளிடம் இருந்து தொடர்ந்து இராணுவ வலிமையைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும், பிரிட்டனின் சௌத்வேல்ஸின் நியூபோர்ட் நகரில் இன்னும் 6 வாரங்களில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டில் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.

ரஷ்யா தனக்கு தோழமை நாடாக இருக்க வேண்டும் என்று நேட்டோ மட்டுமே கோரி வருகிறது. ஆனால், ரஷ்யாவோ நேட்டோவை விரோதியாகப் பார்க்கிறது. அண்மைய ஆண்டுகளாக நிலவிய ஒத்துழைப்புகள் தற்போது சாத்தியமில்லை. ஏனெனில், நேட்டோவின் அண்டை நாடுகளுடன் ரஷ்யாவின் நடவடிக்கைகள் சட்டத்துக்குப் புறம்பாக அமைந்துள்ளன. எனவே, ரஷ்யாவுடனான நீண்டகால நட்புறவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்"- என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தாய்லாந்தில் பெண்களுக்கு சிறப்பு ரயில்

பாங்கொக், ஓக.4

தாய்லாந்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க பெண்களுக்கு மட்டுமான சிறப்பு ரயில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் நீண்ட தூரம் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்குடனேயே தாய்லாந்து அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்கள் மட்டுமே இந்த ரயிலில் பயணிக்க முடியும். அந்த ரயிலில் பொலிஸார் உட்பட ரயில் பணியாளர்கள் அனைவரும் பெண்களாகவே இருப்பர்.

கடந்த மாதம் இரவு நேரத்தில் ஓடும் ரயிலில் பயணம் செய்த 13 வயதுச் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய 22 வயதான ரயில் பணியாளர் கைது செய்யப்பட்டார். சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்துக்கு நாடு முழுவதும் பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. இதனை அடுத்து பெண்கள்ரயில்சேவைதொடங்கப்பட்டுள்ளது. (ற)

## நேபாளத்தில் நிலச்சரிவு; 8 பேர் சாவு

காத்மண்டு, ஓக.4

நேபாளத்தில் பெய்துவரும் கடும் மழையை அடுத்து ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த இடர் தலைநகர் காத் மண்டுவில் இருந்து 75 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சிந்துபால்சௌக் மாவட்டத்தில் நடந்துள்ளது.

அந்தப்பகுதியில் உள்ள மலைப் பகுதியில் இருந்து நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து மலையடி வாரத்தில் இருந்த கிராமத்தின் 24 வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன.

குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ள அந்த நாட்டு அதிகாரிகள், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர். அதேவேளை, சுன்கோஷி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## காஸா பகுதி மக்கள் தப்பிப்பதற்காக ரஃபா எல்லையைத் திறந்தது எகிப்து

கெய்ரோ, ஓக.4

இஸ்ரேலில் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்து வரும் காஸா பகுதி மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக ரஃபா எல்லைப் பகுதியைத் திறந்து விடுவதற்கு எகிப்து அரசு முடிவு செய்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடரும் நிலையில் ரஃபா பகுதியில் உள்ள எல்லையை திறப்பதாக எகிப்து அரசு தெரிவித்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீனர்களுக்கு மருத்துவ உதவிகளைச் செய்வதற்காக எல்லையை திறப்பதாக அந் நாடு அறிவித்துள்ளது.



முன்னதாக ரஃபா பகுதியில் நிகழ்ந்த கடுமையான தாக்குதல்களை அடுத்து பாதுகாப்பு கருதி எகிப்து அரசு ரஃபா எல்லையை மூடியது.

காஸா மக்கள், எகிப்தின் ரஃபா பகுதி வழியாக மட்டுமே அங்கிருந்து வெளியேற முடியும்.

இந்த நிலையில் எல்லை மூடப்பட்டதால் காஸா மக்கள் தாக்குதலில் இருந்து தப்பித்து வெளியேற முடியாமல் தவித்து வந்தனர். (ற)

## எரிவாயு குழாய் வெடித்து 24 பேர் சாவு

தைவானில் எரிவாயுக் குழாய் கசிவால் ஏற்பட்ட தீ விபத்தில் தீயணைப்பு வீரர்கள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர். 270 பேர் காயமடைந்துள்ள நிலையில், உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்த விபத்தால் 3 சதுர கிலோ மீற்றர் அளவிலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் படையினர் தெரிவித்தனர். (ற)

## வீழ்ந்த மலேசிய விமானத்தின் தடயங்களை சேகரிப்பதில் சிக்கல்

கீவ், ஓக.4

உக்ரைனில் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தில் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் சர்வதேச விசாரணைக் குழுவின் பணிகள் தடைப்பட்டுள்ளன.

ஐரோப்பிய பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து பொலிஸ் அதிகாரிகளும் மலேசிய விமானத்தின் பாகங்கள் சிதறிக் கிடக்கும் பகுதியில் தடயங்களைச் சேகரித்து வருகின்றனர்.

இந்தநிலையில் தாங்கள் ஆய்வு செய்த பகுதிக்கு அருகில் தாக்குதல்கள் நடைபெற்றதால் பாதுகாப்பு கருதி தங்கும் விடுதிக்கு திரும்பியுள்ளோம் என்று விசாரணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி கிழக்கு உக்ரைன் பகுதியில் மலேசிய பயணிகள் விமானம் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணம் செய்த 298 பேரும் உயிரிழந்தனர். (ற)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கண்கள் திறக்கட்டும் தேசம் பிரகாசிக்கட்டும்

தமிழ் பேசும் மக்களின் தேசிய பிரச்சினையை இனி மேற்கொண்டும் இழுத்தடிக்க வேண்டாம்- இழுத்தடித்தால் அதனால் வரக்கூடிய எதிர்விளைவுகள் நாம் அதிலிருந்து மீளமுடியாத வகையில் அமைந்துவிடலாம் என்று கோட்டை நாகவிகாராதிபதியும், சமூக நீதிக்கான அமைப்பின் தலைவருமான வண. மாதுலுவாவே சோபித தேரர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தேசிய இனப்பிரச்சினையானது பிற்காலத்தில் வந்த 30 வருடகால ஆயுதப் போராட்டத்தின்போது முளைத்த ஒன்றல்ல. அதன் ஆரம்பகாலம் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலத்துக்கு முற்பட்டது. ஆனால் அது வலுப் பெற்றதும், ஆயுதப் போராட்டமாக விரிவடைந்ததும் சுதந்திரத்துக்கு பின்னர்தான். இனப் பிரச்சினை முளைவிட்டது சட்ட நிரூபண சபையில் இலங்கைக்கு சுதந்திரம் பெறப்படுவதற்கான வெள்ளை அறிக்கையைத் தமிழர்கள் சார்பில் கண்மூடித்தனமாக ஆதரிக்கப்பட்ட காலத்திலிருந்த ஆரம்பமாவதாக ஒரு காலத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியின் மூளை என்று போற்றப்பட்டவரான அமரர் வி.நவரத்தினம் குறிப்பிடுவார். தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் என்ற அவரது நூலில் இது தொடர்பாக விவரங்களைக் காணலாம்.

எனவே இனப் பிரச்சினை ஆரம்பித்து அதன் வயது 65 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. காணி, தொழில், குடியுரிமை, கல்வி, பொருளாதாரம், மொழி, சமயம், கலாசாரம் போன்ற சிறுபான்மை மக்களின் வாழ்வியலுக்கு அடிநாதமாக விளங்கும் அனைத்து அம்சங்களிலும் பதவியில் அமர்ந்த அரசுகள் ஏதோ ஒருவகையில் தலையீடுகளை செய்து வந்துள்ளன. பதவியிலிருந்த அரசுகளுடன் சிறுபான்மையினர் இணைந்து இருந்தால் என்ன, அவர்களின் செயற்பாடுகளை எதிர்த்து நின்றால் என்ன அவர்களின் வாழ்வியல் அம்சங்களில் எந்த அரசும் கை வைக்காமல் இருந்ததில்லை. சில சமயங்களில் ஆட்சியிலிருந்தவர்கள் ஒன்றும் செய்யாவிட்டாலும் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்ட கெடுதிகளை அவர்கள் திருத்த முற்படவில்லை. திருத்த முற்பட்டாலும் அவர்களால் அதனைச் செயற்படுத்த முடியவில்லை. அதற்கு ஓர் உதாரணம்தான் அரசின் மும்மொழித் திட்டம்.

முப்பது வருட கால அனுபவம் எமக்கிருக்கிறது. மீண்டும் அந்த நிலைமை ஏற்படாதிருக்க வேண்டுமாயின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். சட்டம் அனைவருக்குமே சமமாக இருக்க வேண்டும் என்றும் வண.சோபித தேரர் இடித்துக் கூறியிருக்கிறார்.

போர் ஏற்பட்டதற்கு அதற்கு முன் பதவியிலிருந்த அரசுகளின் தவறான கொள்கைகள் என்றால் போர் முடிந்த பிறகாவது அந்தத் தவறுகள் திருத்தப்பட வேண்டாமா? உலக நாடுகள், ஐ.நா.சபை, அதன் செயலாளர் நாயகம், ஐ.நா.மனித உரிமைகள் சபை, அரசே நியமித்த உண்மை மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்கள் என்று பல்வேறு வகை களினால் எடுத்துக் கூறப்பட்டும் இடித்துரைக்கப்பட்டும் அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

தமிழர்களும் பெரும்பான்மை தமிழர் ஆதரவைப் பெற்ற கட்சிகளும் தலைவர்களும் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் எதிரிகளைப் போல பார்க்கப்படும் நிலைமை. சிங்கள பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிக்கு ஒரு நீதியும் தமிழ் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிக்கு வேறு ஒரு நீதியும் இருக்க முடியாது. அப்படி எந்த நாட் டிலும் நீதி நிலவுவதாகக் காணோம். இது ஜன நாயகத்தின் விழுமியங்களையே விழுங்கி ஏப்பம் விடும் போக்காகும். அதனால்தான் உலக நாடுகள் பலவும் இங்கு நடப்பவைகளை உன்னிப்பாக அவதானிக்க நேர்ந்துள்ளது.

இந்த நிலைமையில்தான் பௌத்தர்களின் நன்மதிப்பும் மரியாதையும் கொண்ட வண.மாதுலுவாவே சோபித தேரரின் எச்சரிக்கை வெளி வந்துள்ளது. ஆட்சியிலிருக்கும் அனைவரது கண்களையும் தேரரின் கருத்து திறப்பதாக இருக்க வேண்டும். அதன் மூலம் நாட்டின் எதிர்காலம் பிரகாசமாவதற்கு வழி பிறக்க வேண்டும்.

# கையாலாகாத மனிதராக தவிக்கின்றார் ஜனாதிபதி

### நல்ல தீர்வைக் காண்பதே ஒரே தெரிவு

கந்தவனம் கோணேஸ்வரன்



ஜனாதிபதிக்கு நெருக்குவாரங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. ஒருகாலத்தில் உள்நாட்டு நெருக்கடிகளை மாத்திரமே ஜனாதிபதி எதிர்கொண்டு வந்தார். வெளிநாட்டு அழுத்தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே காணப்பட்டன. 2009 முள்ளிவாய்க்கால் அவலத்தை நிகழ்த்தித் தன்னை ஒரு பராக்கிரமசாலியாக நிலைநிறுத்த அவர் முயன்றார். ஆனால், அந்த எண்ணம் வெற்றிபெறவில்லை. மாறாக, உள்நாட்டு நெருக்கடிகளின் வடிவங்கள் மாறின. வெளிநாட்டு நெருக்கடிகள் விஸ்வரூபம் எடுத்தன.

அவற்றைச் சமாளிப்பதாக எண்ணிக் கொண்டு அவர் உண்மைக்குப் புறம்பாக நடக்கத் தொடங்கினார். ஜனாதிபதிக்கு வாய்த்த ஆலோசகர்களோ அமைச்சர்களோ சுயசிந்தனை இல்லாதவர்களாக அமைந்துவிட்ட காரணத்தால் அவருக்கு நேரான வழிகாட்ட இலங்கையில் சரியான இராஜதந்திரிகள் இல்லாமற் போய்விட்டனர். ஜனாதிபதி எவர் எவரையெல்லாம் இராஜதந்திரிகள் என்று எண்ணித் தன்னுடன் வைத்துக்கொண்டாரோ அவர்கள் அனைவரும் சுயதந்திரிகளாக இயங்கத் தொடங்கினர்.

குடும்ப உறவுகளாவது அவரைச் சரியான பாதையில் இட்டுச்செல்ல வல்லவையா என்று பார்த்தால் அவையும் கவலைக்கிடமாகவே இருக்கின்றன. அவர்கள் சகோதரரின் பெயரைச் சொல்லித் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளும் பணியில்தான் கவனம் செலுத்துகிறார்களேயொழிய, மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிமனிதர் வருங்காலத்தில் சிறந்த தலைவர் என்ற அடைமொழிகளுடன் இலங்கையரால் பேசப்பட வேண்டும் என்ற நோக்கில் எவ ரும் எக்கருமத்தையும் செய்ததாகத் தெரியவில்லை.

மறுபுறம் தமிழர்கள் தங்கள் போராட்ட வடிவத்தை மாற்றி அரசுடன் போரிடத் தொடங்கினர். தமிழர்கள் களத்தை விட்டே ஓடிவிடுவார்கள் என்ற கற்பனையிலிருந்த அரசுக்கு இது பெரும் அதிர்ச்சியானது. விடுதலைப் புலிகளை மாத்திரம் அவதானித்துக்கொண்டிருந்த அரசுக்கு இப்போது எல்லாத் தமிழர்களையும் சமாளிக்கவேண்டிய பரிதாப நிலை தோன்றியிருக்கிறது. பயங்கரவாதிகள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் காலத்தில் எடுக்கப்பட்ட ஆயுத நடவடிக்கைகளைத் தமிழர்கள் மேல் இப்போது பிரயோகிக்கமுடியாமல் அரசு திண்டாடுகிறது.

தமிழர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். புலம்பெயர் தமிழர்கள் சீற்றமடைந்தார்கள். இலங்கைக்கு வெளியே வாழ்கின்ற இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் ஆகிய நாடுகளின் தமிழர்கள் கொதிப்படைந்தார்கள். இலங்கைத் தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென்ற குரல்கள் உலகமெங்கும் ஒலித்தன. இலங்கை ஜனாதிபதி உலகத்துக்குப் பதில் சொல்ல வேண்டியவரானார்.

ஐ.நா. சபையின் தலையீடு மெல்ல மெல்ல உருவானது. அவர்கள் படிப்படியாகத் தமது கவனத்தை இலங்கை மேல் திருப்பினார்கள். இலங்கை அரசுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துமிடத்து உதவிகள் வழங்கவும் தயார் என அறிவித்தார்கள். இலங்கை தானாகச் செயற்பட போதுமான அவகாசத்தையும் அளித்தார்கள். ஆனால், இலங்கையின் உள்நோக்கம் தமிழர்களுடன் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்ப தாக இருக்கவில்லை. மாறாக, தமிழர்களைப் பலம்குன்றச்செய்து பிரச்சினைகளை இல்லாமற் செய்வதாகவே இருந்தது. இதனால் இன்று ஜனாதிபதி நெருக்குவாரங்களுக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறார்.

இலங்கையின் சக்திக்கும் அப்பால் உலக மட்டத்திலான சர்வதேச விசாரணை தொடங்கப்பட்டாயிற்று. விசாரணையாளர்களை உள்ளே வரவோ, இலங்கையில் விசாரணை நடத்தவோ விடமாட்டோம் என இலங்கை உறுதியாக இருக்கின்றபோதிலும் பல்வேறு பொறிமுறைகள்மூலம் மனித உரிமைகள் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது விசாரணையைத் தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்த விசாரணை பற்றிய வாய்மூல அறிக்கை அடுத்துவரும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டிலும், விரிவான அறிக்கை மார்ச் 2015இல் இடம்பெறவிருக்கும் மாநாட்டிலும் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கைக்குள் காலடி வைத்தபோதெல்லாம் எதிர்ப்புக் காட்டுவதில் முன்னிலை வகித்த அமைச்சர் வீரவன்ஸ, சர்வதேச விசாரணையாளர்களின் அறிக்கை பூர்த்தியானபின், அது மனித உரிமைகள் ஆணையத்தின்முன் சமர்ப்பிக்கப்பட்டு இறுதியில் இலங்கை ஆட்சியாளர்களை உலகநீதிமன்றத்தின் முன் நிறுத்துமளவுக்குச் செல்ல வாய்ப்பிருக்கிறது என்று அச்சம் வெளியிட்டுள்ளார்.

ஆனால், ஜனாதிபதியோ எதைப்பற்றியும் கவலைப்படாதவராக காணாமற் போனோரைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவை தற்போது போர்க்குற்ற விசாரணைகளைச் செய்யும்படி பணித்திருப்பதோடு, அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்குடன் உலகத்தரம் வாய்ந்த மூன்று சர்வதேச நிபுணர்களை ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஆலோசகர்களாகவும் நியமித்திருக்கிறார்.

திடீரென ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட இந்நியமனமானது, ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபை இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குத் தன்னால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பணிகளைச் செழுமைப்படுத்தவென நியமிக்கப்பட்ட விசேட தரமிக்க மூன்று அறிஞர்களின் நியமனத்துக்குச் சமாந்திரமானதெனக் கருத இடமுண்டு.

எவ்வாறெனினும் இலங்கை அரசு, சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என உறுதியாகக் கூறிவிட்டது. மேற்குலக நாடுகள் இலங்கையின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க முயல்கின்றன. ஐ.நா. சபை யும், அதன் போர்க்குற்ற விசாரணைக் குழுவும் மேற்குல நாடுகளின் திட்டப் படிதான் இயங்குகின்றன. மனித உரி மைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைமேல் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. அவர் ஒரு புலி ஆதரவாளர். அவரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவும் அந்தத்தன்மை கொண்டதாகவே காணப்படுகிறது. எனவே, அவர்கள் தீர்ப்பைக் கையில் வைத்துக்கொண்டு விசாரணைகளைத் தொடங்கியிருக்கக் கூடும் எனக் கருதுகிறோம் என்றெல்லாம் நிராகரிப்புக்கான காரணங்களையும் அரசு முன்வைத்திருக்கிறது.

ஆனால், இதனை மறுபுறமாகப் பார்த்தால், இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவை தமிழர்கள் எப்படி நம்புவது என்ற கேள்வி எழுவதிலும் நியாயமுண்டு. விசாரணைக்குழுவை நியமித்த நிர்வாகம்தான் இலங்கையில் தமிழர்கள் வதைபடக் காரணமாகவும் இருந்திருக்கிறது. இலங்கையில் நடந்த போர் சிங்கள அரசுக்கும் தமிழ்க் குடிமக்களுக்கும் இடையிலானது. இந்த நிலையில் அரசு தன்னைத்தானே விசாரித்துச் சரியான தீர்ப்பைத் தருமென தமிழ்மக்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? தங்கள் நிர்வாகத்தைக் குற்றமற்றது எனக் காட்டுவதற்கு அரசு முயலாது என்பதற்குச் சரியான காரணங்கள் எதுவும் இருப்பதாகத் தென்படவில்லை.

எனவே, அரசு தன்னால் நடு நிலை மைத் தன்மை கொண்ட விசாரணையை நடத்தித் தமிழ்மக்களின் மனங்களில் இடம்பிடிக்க முடியுமா என்பதை முதலில் யோசிக்கவேண்டும். சர்வதேச விசாரணைக்குழுவைக் குற்றஞ் சொல்ல முயலாமல் தனக்குரிய கடமைகளைத் தான் சரிவர நிறைவேற்றுகிறேனா என்பதை அரசு சுய பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ளவேண்டும்.

இன்றைய அரசியல் நிலைமையில் தமிழ் மக்கள் முன்னிலையில் ஜனாதிபதி தளர்ந்துபோன ஒரு மனிதராகவே காணப்படுகிறார். வெற்று வீம்புகளை மாத்திரம் வைத்துக்கொண்டு அதிகாரங்களைப் பயன்படுத்துகின்ற அவரால் இப்போது வேறெதுவும் செய்யமுடிவதாகத் தெரியவில்லை. இனவெறி வல்லூறுகளின் மத்தியில் சிக்குண்டு, வெளிநாடுகளிடமும் நல்ல பெயரிழந்து, தமிழர்களிடமிருந்தும் அந்நியப்பட்டுப் போய்த் தவிக்கின்ற ஒரு மனிதராகவே அவர் தோற்றமளிக்கிறார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது, முதலாவது ஆட்சிக்காலத்தில் கொண்டிருந்த மிடுக்கை இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இழந்துக் காணப்பட்டார். சோர்ந்துபோன ஜனாதிபதியாகவே ஆட்சியிலிருந்து நீங்கினார். பிறர் கவனத்தையீர்க்காத நிலையிலேயே அவர் மரணத்தையும் தழுவினார். சந்திரிகா அம்மையார்கூட தனது முதலாவது ஆட்சிக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை இரண்டாவது ஆட்சிக்காலத்திலும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. தன்னளவில் தோற்றுப் போன ஒரு ஜனாதிபதியாகவே அவரும் பதவி விலகினார்.

இப்போது அவ்வப்போது செய்திகளில் வந்துபோகின்ற ஒரு மனிதராக மட்டும் தான் அவர் காணப்படுகின்றார். ஜனாதிபதி ராஜபக்ஷகூட தனது இரண்டாவது பதவிக்காலத்தில் தளர்ந்துவிட்டவராகவே காணப்படுகிறார். முதலாவது பதவிக் காலத்தில் அவர் கொண்டிருந்த ஆளுமையை இப்போதும் கொண்டிருப்பவராகத் தெரியவில்லை.

# ஐ.நா. தீர்மானம் மீதான முடிவுப்படியே விசாரணைக்குழு தொடர்பிலும் முடிவு

## இந்திய வெளிவிவகார அமைச்சு கூறுகிறது

கொழும்பு.ஓக.4

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்த வருடம் தீர்மானம்கொண்டுவரப்பட்டவேளை எடுக்கப்பட்ட நிலைப் பாட்டை அடிப்படையாக வைத்தே சர்வதேச விசாரணையாளர்களுக்கு இந்தியா வருவதற்கான அனுமதியை வழங்குவது குறித்த முடிவு எடுக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருதீன் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாங்கள் தீர்மானத்தின் மீது வாக்களிக்காத அதேவேளை விசாரணை ஆணைக்குழு தொடர்பாக குறிப் பிடப்பட்டிருந்தமைக்கு எதிராக வாக்களித்தோம்.

இவற்றை அடிப்படையாக வைத்தே சர்வதேச விசாரணையாளர்கள் இந்தியா வருவதற்கான அனுமதியை



சையத் அக்பருதீன்

வழங்குவதா என்ற முடிவு எடுக்கப்படும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐ.நா. விசாரணைக் குழு இந்தியா வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துள்ளார்.

இந்தியாவிலிருந்தோ அல்லது ஐ.நாவிலிருந்தோ இவ்வாறான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

எனவே இதற்குப் பதிலளிக்க வேண்டியதில்லை - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

## சி.டபிள்யூ.ஈ. களஞ்சியத்துக்கு 'சீல்'



கொழும்பு.ஓக.4

இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சி.டபிள்யூ.ஈ) சீதுவை விநியோக நிலையத்திலுள்ள களஞ்சியத்துக்கு பொது சுகாதார பரிசோதகர்கள் 'சீல்' வைத்துள்ளனர்.

உணவு வகைகள் சுகாதார மற்ற முறையில் பொதியிடப்பட்டிருந்தமையே இந்த நடவடிக்கைக்கு காரணம் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சென ரத் பண்டார தெரிவித்துள்ளார்.

'சீல்' வைக்கப்பட்ட போது குறித்த களஞ்சியத்தில் சுமார் ஒரு லட்சம் கிலோகிராம் பச்சை அரிசியும், 30 ஆயிரம் கிலோகிராம் கீரி சம்பா அரிசியும், 35 ஆயிரம் கிலோகிராம் பாஸ்மதி அரிசியும், 24 ஆயிரம் கிலோகிராம் சிவப்பு சீனியும் இருந்தாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சீதுவ விநியோக களஞ்சிய சாலை முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் நாளை செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (ஓ)

# போலி நாணயத்தாளில் பொருள் கொள்வனவு

## செய்தவர் சிக்கினார்

கொழும்பு.ஓக.4

போலி ஐயாயிரம் ரூபா நாணயத்தாளை கொடுத்து வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள் கொள்வனவில் ஈடுபட்ட நபரை கைது செய்வதற்கான



நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் தம்புள்ளை வர்த்தக மையத்தில் உள்ள வர்த்தக நிலையத்துக்குச் சென்ற நபர் ஒருவர் பொருள்களைப் பெற்றுக் கொண்டு போலி நாணயத் தாளை வழங்கியுள்ளார்.

குறித்த ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள் என வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அடையாளம் கண்டநிலையில் சந்தேக நபர் அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

போலி நாணயத் தாளை வழங்கிய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள அதே வேளை சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை தம் புள்ளை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ஓ)

# இஸ்லாமிய கலாசார உடைகளை அணிந்து வாக்களிக்க முடியாது

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு.ஓக.4

இஸ்லாமிய கலாச்சார உடைகளை அணிந்து வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அண்மையில் கட்சிகளின் செயலாளர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது பெண்கள் ஹிஜாப் அணிந்து கொண்டு வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க முடியாது.

தேசிய அடையாள அட்டைக்கான ஒளிப்படங்களை எடுக்கும் போதும் ஹிஜாப் அணிந்து காதுகளை மறைக்கக் கூடாது.



மஹிந்த தேசப்பிரிய

வாக்குச் சாவடிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்கள் அல்லது வேறு தரப்பினர் முகத்தை மூடிக்கொண்டு வாக்களிக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

# பல்கலைக்கழகப் பிரவேச வெட்டுப்புள்ளி மாத இறுதியில்

கொழும்பு.ஓக்.4

பல்கலைக்கழகங்கள் தொடர்பாக இந்த ஆண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் வெளியிடப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவியான திருமதி க்ஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்துள்ளார்.

இந்த முறை 25.000 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்துள்ள ஆணைக் குழுவின் தலைவி, சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.(ஓ-22)

# கொரிய மொழி பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் 11,14 இல்

கொழும்பு.ஓக்.4

கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி மற்றும் 14 ஆம் திகதிகளில் விநியோகிப்பதற்கு வெளிநாட்டுச் சேவைகள் செயற்பாட்டுப் பிரிவு தீர்மானித்துள்ளது.

இந்த கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையை கொழும்பில் இரு பரீட்சை நிலையங்களிலும் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள 12 பரீட்சை நிலையங்களிலும் ஒக்ரோபர் 11 ஆம், 12ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கொரிய நாட்டின் மனித வளங்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ஓ-22)





கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெராவின் இந்த வருட முதலாவது கும்பல் பெரஹெரா நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. (ஓ)

# இலங்கை அரசின் அவதூறுக் கட்டுரை: தேவைப்படின் மேலதிக நடவடிக்கை

## இந்திய அரசு அறிவிப்பு

கொழும்பு.ஓக.4

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரை அவமதிக்கும்வகையில் வெளியான கட்டுரை தொடர்பில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகள் தேவைப்படுமாயின் அது குறித்து ஆராயப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

அத்துடன், இது விடயம் தொடர்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு மன்னிப்பு கோரியதையிட்டு திருப்தியடைவதாகவும் டில்லி அரசு கூறியுள்ளது.

'ஜெயலலிதா மோடிக்கு எழுதும் காதல் கடிதங்களால் எதனை சாதிக்க முடியும்' என்ற தலைப்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இணையத் தளத்தில் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது.

இது குறித்து இந்திய தரப்பு ஆட்சேபனை வெளியிட்டமையை அடுத்து அதனை இணையத்தளத்தில் இருந்து அகற்றி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு, எந்தவித அதிகாரத்துவ அனுமதியும் இன்றி இந்த கட்டுரை பிரசுரிக்கப்பட்டதாகவும் அது இலங்கை அரசின் உத்தியோகபூர்வக் கட்டுரை அல்ல என்றும் குறிப்பிட்டிருந்தது.

இதற்காக ஜெயலலிதாவிடமும் மோடியிடமும் பகிரங்க மன்னிப்பு கோருவதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் தெரிவித்திருந்தது.

இது குறித்து கருத்துரைத்துள்ள இந்திய வெளியுறவு பேச்சாளர் சயிட் அக்பருதீன் குறித்த கட்டுரை தொடர்பில் இந்தியா உடனடியாக இராஜ தந்திர ரீதியில் செயற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் இது தொடர்பில் உடனடியான நடவடிக்கையை மேற் கொண்டது.

இதன்மூலம் இந்தியாவின் நோக்கம் நிறைவேற்றப்பட்டது. மேலதிக நடவடிக்கைகள் தேவைப்படுமாயின் அது தொடர்பில் ஆராயப்படும்.

எனினும் விடயம் உடனடியாக உரிய தரப்புக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறித்து இந்திய அரசு திருப்திகொண்டுள்ளது என்று அக்பருதீன் குறிப்பிட்டார். (ஓ)

## பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளை புனரமைப்பு

வவுனியா, ஒக.4

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளை விரைவில் புனரமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சங்கத்தின் கிளைகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னோடியாக புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

தற்போதுள்ள இயல்பான சூழ்நிலையில் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளையை ஆவணிமாத நடுப் பகுதியில் புனரமைப்புச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இதற்கு முன்னோடியாக உப தலைவர் ஏ.அன்ரனி, வடமாகாண இணைப்பாளர் எம்.மகேஸ்வரன், மேலதிக வடமாகாண இணைப்பாளர் ஆர்.சித்திரன், வவுனியா கிளைச் செயலாளர் கே.கோல்டன், வன்னிமாவட்ட இணைப்பாளர் ஏ.புண்ணியமூர்த்தி ஆகியோர் செயல் நடவடிக்கைகளுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-30)



கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக நீர் வற்றிய நிலையில் வறண்டு காணப்படுகின்றது. (க-18)

# மருத்துவமனைக்கு வந்து செல்வதில் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்

முல்லைத்தீவு நகரத்தைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களும் -மருத்துவமனைக்கு வந்து செல்வதில் போக்குவரத்து இடர்களை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு, ஒக.4

முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு வந்து செல்வதில் இங்குள்ள கிராம மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், இரணைப்பாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும்- முல்லைத்தீவு நகரத்தைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களும் -மருத்துவமனைக்கு வந்து செல்வதில் போக்குவரத்து இடர்களை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு நகரிலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் பொது மருத்துவமனை அமைந்திருப்பதன் காரணமாக போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமங்களிலிருந்து மருத்துவமனைக்கு வந்து செல்வதில் மக்கள் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

செம்மலை, நாயாறு, அளம்பில், குமிழமுனை, கொக்கிளாய், கொக்குதொடுவாய் ஆகிய கிராம மக்களும் இவ்வாறான நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## அறிவியல் நகரில் அமையவுள்ளது புதிய ரயில் நிலையம்



கிளிநொச்சி, ஒக.4

கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிய ரயில் நிலையம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இதற்கான அடிக் கல்லை நட்டு இந்தப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 60 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த ரயில் நிலையம் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் மற்றும் ஆடைத் தொழிற்சாலை உட்பட ஏனைய தொழில் மையங்கள் மற்றும் நெருக்கமான மக்கள் குடியிருப்புக்கள் என்பன அமையப்பெற்றுள்ள பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர்ப் பகுதி எதிர்காலத்தில் கல்வி, பொருளாதார, வர்த்தக முதலீடுகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அமையவுள்ளதால் இந்தப் பகுதியில் ரயில் நிலையமும் அமையப் பெறுகின்றமை முக்கியமானதாகும்.

கடந்த 29ஆம் திகதி காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் திருமதி அனுசா சிவனேஸ்வரன், விவசாய பீட பீடாதிபதி திருமதி எஸ்.சிவச்சந்திரன், பொறியியல் பீட பீடாதிபதி அ.அற்புதராசா, பல்கலைக்கழக பொறியியலாளர் அ.அரவிந்தன் ஆகியோரும் - ரயில்வே திணைக்களத்தின் பிரதிநிதிகள், தொழில் மையங்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-18)

## கற்சிலைமடுவில் பாலத்தை அமைக்க வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஒக.4

ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு வீதியின் புனரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கற்சிலைமடு பாடசாலைக்கு முன்பாகப் புதிய பாலமொன்றை அமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவித புனரமைப்பும் இல்லாது பழுதடைந்த நிலையில் காணப்பட்ட ஒட்டுசுட்டான் -புதுக்குடியிருப்பு வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வெள்ளம் பாயும் இடங்களில் புதிய பாலங்களை அமைத்து உதவ வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பாக கற்சிலைமடு பாடசாலைக்கு அருகில் பெருமளவில் வெள்ளம் பாய்வதால் மாணவர்கள் வருடாந்தம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே பாலம் ஒன்றை இங்கு அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## மர்மமான முறையில் இறக்கும் வீட்டு வளர்ப்பு நாய்கள்

*வவுனியா, ஒக்.4*

*கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள சிவன்கோவிலுக்கு முன்னால் உள்ள வீதியில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் அண் மைக் காலமாக மர்மமான முறையில் இறந்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.*

*இது தொடர்பாக அந்த வீதியில் உள்ள வீடொன்றில் வசிக்கும்ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; கடந்த ஆடி அமாவாசை தினத்தன்று தமது வீட்டுக்கு முன் புறமாக தமது வளர்ப்பு நாய் இறந்து கிடந்ததாகவும் இது எடுத்த வாந்தியிலிருந்து நச்சுத்தன்மையான வாடை வீசியதாகவும் கூறினார்.*

*அன்றைய தினத்துக்குப் பின்னர் அந்த வீதியிலுள்ள பல வளர்ப்பு நாய்கள் இவ்வாறான முறையில் இறந்து கிடப்பதை அவதானிக்க முடிகின்றது. தொடர்ச்சியாக*



*கோப்புப்படம்*

*வளர்ப்பு நாய்கள் இறந்து வருவதையடுத்து அந்தப் பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.*

*இதே வேளையில் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனின் வீடும் இந்தப் பகுதியில் அமைந்துள்ளதுடன் அவரது வீட்டுக்கு முன்பாகவும் நாயொன்று இறந்து கிடந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-421)*

## பயிர்கள் அழிக்கப்படுவதாக விவசாயிகளால் முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக.4

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள 800 ஏக்கர் வரையிலான நெற் பயிர்களும் 150 ஏக்கர் வரையிலான உப உணவுப் பயிர்களும் கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கிளிநொச்சி அரச அதிபரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

எருமை மாடுகள் நெற்செய்கை நிலங்களுக்கு அருகில் மேய்ச்சலுக்கு விடுவதன் காரணமாக அவை வயல்களில் இறங்கி அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் நெற்செய்கை முற்றாக அழிவடையும் எனவும் விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (க-18)

## வட்டக்கச்சி ஆலயத்தில் திருட்டு சம்பவம்

கிளிநொச்சி, ஒக.4

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியிலுள்ள முருகன் ஆலயத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் மூலஸ் தானத்தில் காணப்பட்ட விக்கி ரகங்களை நகர்த்தி விட்டு மூலஸ்தானத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த ஐம்பொன் தகடு, மற்றும் பெறுமதி மிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் வட்டக்கச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்கள் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன.

ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம், வன்னேரிக்குளம் பிள்ளையார் ஆலயம் என்பனவற்றிலும் கடந்த மூன்று மாதங்களுக்குள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18-426)

## நெளுக்குளம் மயானத்தைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, ஒக. 4

வவுனியா நெளுக்குளம் பகுதியிலுள்ள மயானத்தைப் புனரமைக்குமாறு அதனைப் பயன்படுத்திவரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மயானப் பகுதியில் பாதீனியச் செடிகள் பரவிக் காணப்படுவதுடன் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களும் காணப்படுகின்றன.

மேலும் அங்குள்ள கிணற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் அதனைச் சுற்றிவரப் பற்றைகள் காணப்படுகின்றன.


கிணற்றுநீரும் அசுத்தமாகக் காணப்படுகின்றது. சில அவசர தேவைகளுக்குக்கூட இந்தக் கிணற்றைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த மயானத்தில் காணப்படும் பற்றைகளை அகற்றுமாறும் மயானத்தைப் புனரமைக்குமாறும் நெளுக்குளம், சாம்பல்தோட்டம், கூமாங்குளம், மரக்காரம்பனை, பாலாமைக்கல், முள்ளிப்புலவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது குறித்து வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை உறுப்பினர்கள் சிலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மயானத்தின் நுழைவாயில், அலங்காரவளைவு என்பன அமைக்கப்பட்டிருப்பதுடன் பற்றைகளும் அகற்றப்பட்டிருந்தன.

ஆனால் பற்றைகள் மீண்டும் வளர்ந்து காணப்படுகின்றன.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைத் தலைவரின் அனுமதியுடன் மயானம் சீரமைக்கப்படும் எனத் தெரிவித்தனர். (க-402)




மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீடத்தின் யாழ். மன்றத்தினரின் ஏற்பாட்டில் நேற்று ஆடிப்பூர விழாவையொட்டி கஞ்சிக் கலயங்களை ஏந்தியவாறு செவ்வாடை சக்திகளின் ஊர்வலம் இடம்பெற்றது. யாழ். திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து புறப்பட்ட அடியவர்கள் அணி அணியாக நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தைச் சென்றடைந்தனர். அங்கு அன்னை ஆதிபராசக்தியின் திருவுருவச் சிலைக்கும், சுயம்புவுக்கும் பால் அபிஷேகம், கஞ்சி வார்த்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஒ)

## காரணம் தெரிவிக்காமல் உடனடியாக இடமாற்றம்

### யாழ்.மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் சிலருக்கு

யாழ்ப்பாணம், ஒக. 4

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் சிலருக்கு, காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமல் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடல் கிளையில் பணியாற்றிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.ஜெயக்குமார் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கும், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி ரி.ஜெயராஜா கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும், கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஆர்.கிருஷ்ணராசன் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கும் இணைக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் ஒப்பத்துடன் கடந்த வியாழக்கிழமை இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இடமாற்றத்துக்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. (வ-5)

# ஒளிர்வதற்காக காத்திருக்கும் பிரதான வீதிகளின் விளக்குகள்

அச்சுவேலி.ஒக்.4

யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகளில் 800இற்கும் மேற்பட்ட உயர்தர மின் விளக்குகள் ஒளிர்வதற்குக் காத்துக் கொண்டு இருக்கின்றன. மேற்படி மின் விளக்குக்கான மின்சாரக் கட்டணத்தை பிரதேச சபைகள் செலுத்துவதற்கான ஒப்புதலை இலங்கை மின்சார சபைக்கு தெரிவிக்காமல் இருப்பதால்தான் அவற்றுக்கு மின்சார இணைப்புக்கள் செய்யப்படவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீதிகள் அகலமாக்கப்பட்டு காப்பெற் வீதியாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ் - பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன் துறை வீதி உட்பட ஐந்து வீதிகளிலும் வியாபார நிலையங்கள் நெருக்கமாகவுள்ள பகுதிகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்த மின்விளக்குகள் நிறு வப்பட்டுள்ளன.



வீதியின் இருமருங்கிலும் குறிப் பிட்ட தூர இடைவெளியில் சீமெந்தால் பீடம் நிறுவப்பட்டு அதில் இரும்புத்தூண் நிறுத்தப் பட்டு கூடிய வெளிச்சம் கொண்ட மின் விளக்குகள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒளிரக் காத்துக் கொண்டிருக்கும் மின் விளக்கு ஒன்றை நிறுவுவதற்கான செலவு மட்டும் 80 ஆயிரம் ரூபா வரையில் இருக்கும் என்று கூறப்படுகின்றது.

பல மில்லியன் ரூபா செலவில் பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு நிறுவப்பட்டுள்ள இந்த மின் விளக்குக்கான மின்சாரக் கட்டணத்தை மட்டும் உள்ளூராட்சி சபைகள் செலுத்த வேண்டும். யாழ்.மாநகர சபை நிர்வாக எல்லைப்பரப்பில் நிறுவப்பட்டுள்ள மின் விளக்குகளில் நல்லூர் ஆலயப் பகுதி மற்றும் யாழ்.கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள மின் விளக்குகள் கடந்த வாரம் தொடக்கம் ஒளிரத் தொடங்கியுள்ளன. ஏனைய விளக்குகளுக்கு மின் இணைப்பு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மின்சாரம் எப்போது கிடைக்கும் என்பது குறித்து தெரியவில்லை. (வ-11)



## 'நேசமுடன்' மருத்துவ பரிசோதனை முகாம்

தென்மராட்சி, ஒக.4

தென்மராட்சி கல்வி வலயமும், யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் இணைந்து 'நேசமுடன்' என்னும் மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாமை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தினர்.

'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் சிறுவர் உரிமைகளை வலுவூட்டும் நோக்குடன் மாணவர்களது உடல், உள ஆரோக்கிய மேம்பாட்டுக்கான பயணம் 1 என்னும் மருத்துவ பரிசோதனை முகாமில் 400 க்கு மேற்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்.போதனா மருத்துவமனை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஆகியவற்றின் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் ஆகியோருடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம், 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் ஏ.ஜி.ரொசைரோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)

## சுன்னாகம் பகுதியிலுள்ள 15 தனியார் கிணறுகளின் நீர் பரிசோதனைக்கு

வலி.வடக்கு, ஒக.4

சுன்னாகம் பகுதியில் உள்ள 15 தனியார் கிணறுகளின் நீர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் பரிசோதனைக்காக கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் இலங்கை மின்சார சபையில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில் காரணமாக கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ள நிலையில் தமது கிணறுகளின் நீரின் தன்மையை தனிப்பட்ட முறையில் பரிசோதிக்கும் வகையில் பொது மக்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே பிரதேச சபை மற்றும் சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகளால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையினரால் மின்சார சபைக்கு அண்மையாகவுள்ள கிணறுகளின் நீரின் தன்மையை உறுதிப்படுத்தித் தருமாறு விடுத்த கோரிக்கையின் பெயரில் 4 கிணறுகளில் இருந்து நீரின் மாதிரிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகின்ற போதிலும் அதனுடைய பெறுபேறு இதுவரையில் குறிப்பிட்ட அரச திணைக்களங்களுக்கு அறிக்கை கிடைக்கப்பெற வில்லை. இந்த நிலையில் தற்போது பொதுமக்கள் தாமாக வலிந்து தமது கிணறுகளின் உண்மை நிலைமையை அறியும் வகையில் கிணற்று நீரை சோதனை செய்ய நடவடிக்களை மேற் கொண்டுள்ளதன் அடிப்ப டையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையால் நீரின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் தனியார் கிணறுகளை பரிசோதனை செய்வதற்கு வேண்டியளவு இரசாயனப் பொருள்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இருந்த இரசாயனப் பொருள்களை வைத்தே குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள மட்டுப்படுத்திய கிணறுகளின் மாதிரிகள் பாசோதனைக்கு பெறப்பட்டதாகவும் அதிகார சபையினர் தெரிவித்துள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக குறிப்பிட்ட அதிகார சபையின் அலுவலகத்துடன்தொடர்பு கொண்ட போது இரசாயனப் பொருள்கள் தம்வசம் இல்லை என்பதை குறிப்பிட்ட அலுவலக அலுவலர்களும் உறுதிப்படுத்தியுள்ளார்கள். (வ-86)

## யாழ்.நகரின் வீதிகளில் பாலைப்பழம்



யாழ்ப்பாணம், ஒக.4

வன்னியில் இருந்து பெருமளவு பாலைப்பழங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு மத்திய பஸ் தரிப்பு நிலையப் பகுதியில் விற்கப்பட்டது.

ஒரு சுண்டு பாலைப்பழம் 5[illegible] ரூபாவாக விற்கப்படுகிறது.

வீதியோரங்களில் வைத்து வி[illegible] பனை செய்வதால் தூசு படிந்[illegible] சுகாதாரக் கேடு ஏற்படும் எ[illegible] பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-

## அட்டவணைப்படுத்தப்படாத பதவி; அரைவாசிப் பேர் வெளியிடத்தா[illegible]


### பருத்தித்துறை பிரதேச சபைக்கு

வடமராட்சி, ஒக.4

பருத்தித்துறை பிரதேச சபையால் வெற்றிடமாக உள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு நியமனம் பெற்றவர்களில் அரைவாசிப்பேர் வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சபையில் வெற்றிடமாகவுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை மூலம் 23 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 11 பேர் வெளி இடங்களை[illegible] சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டது.

பிரதேச மக்களிடமிருந்து வரிகளைப் பெற்றுக்கொள்[illegible] பருத்தித்துறை பிரதேச சபை பிரதேசத்தைச் சேர்ந்த இளை[illegible] யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்காது வெளி இ[illegible] களைச் சேர்ந்தோருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதையி[illegible] பிரதேச மக்கள் கொதிப்படைந்துள்ளனர். (ஒ-17



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்**: எந்த ஒரு காரியமும் மந்தமாக நடக்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்த அளவு இலாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். தொழில் தொடர்பான செலவு கூடும்.



**இடபம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அவர்களின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும்.



**மிதுனம்**: எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கிச் சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பார்கள். எனவே கவனமாக இருப்பது நல்லது. நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும்.



**கடகம்**: தொழில் வியாபாரத்தில் இலாபம் கூடும். வாக்கு வன்மையால் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாள்களாக தள்ளிப்போன பதவி உயர்வு கிடைக்கும்.



**சிங்கம்**: குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். பணவரவு திருப்தி தரும் விதத்தில் இருக்கும். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும்.



**கன்னி**: எடுத்த காரியத்தைச் செய்துமுடிப்பதில் இழுபறியான நிலை காணப்படும். சாதாரணமாகப் பேசினாலும் மற்றவர்கள் அதில் குறை காண்பார்கள். வாகனங்களில் செல்லும்போதும், ஆயுதங்களைக் கையாளும்போதும் கவனம் அவசியம்.



**துலாம்**: எண்ணியதைச் செய்து முடிக்க முடியாமல் தடங்கலை உண்டாக்கும். தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உங்களது செயல்களில் மற்றவர்குறை காண நேரலாம். தெய்வ பக்தி அதிகரிக்கும். பயணம் செல்ல நேரலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.



**தனுசு**: எதிர்பாராத திருப்பம் உண்டாகும். சிந்தித்துச் செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். பயணங்களின் போதும் வாகனங்களை செலுத்திச் செல்லும்போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வேலைப்பளு அதிகரிக்கும்.



**மகரம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அவர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. தொழில், வியாபாரம் மந்தமாகக் காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். எதிலும் திட்டமிட்டுச் செயற்படுங்கள்.



**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். உறவினர்களுடன் அனுசரித்து செல்வதும், வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.



**மீனம்**: புதிதாக உருவாகின்ற பணியைத் தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். சிக்கனத்தைப் பின்பற்றுவீர்கள். அலுவலகங்களில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

## நாளை

**ஆடி-20 செவ்வாய்க்கிழமை | 05.08.2014**

திதி: நவமி பி.ப.12.38 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.ப.07.15 வரை

சுபநேரம்: 10.34-12.04 வரை
இராகுகாலம்: 03.04-04.34 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## சமாதி

ஒரே வழி எல்லோருக்கும் ஏற்றதாக அமையாது. ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம் அல்ல. சடங்குகள் மிகவும் தாழ்ந்தவை; கடவுளைப் புறத்தில் வழிபடுவது அதைவிட மேலானது; அகத்தில் வழிபடுவது இன்னும் மேலானது; சில வேளைகளில் சாதனைகள் படிப்படியாக அமைவது தேவைப்படலாம், ஆனால் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரே ஒரு வழியே போதுமானது. "ஞானத்தை அடைவதற்குக் கர்ம நெறியையும் பக்தி நெறியையும் கடைப்பிடித்தே ஆக வேண்டும்" என்று எல்லோரையும் வற்புறுத்துவது வடிகட்டின மடமை ஆகும்.

மேலான ஒரு நிலையை எய்தும்வரை, பகுத்தறிவுப் பாதையில் செல். அந்த நிலையை அடைந்த பிறகு, அது பகுத்தறிவினும் மேலானது என்பதும் விளங்கும். உணர்வையும் கடந்து அப்பால் இருப்பது சமாதி நிலை. நரம்புத் தளர்ச்சியால் உண்டாகும் வெறி நிலைகளைச் சமாதி என்று எண்ணாதே. சமாதி நிலை எய்தி விட்டதாகப் பாசாங்கு பண்ணுவது மிகவும் பயங்கரமானதாகும். இயல்புணர்ச்சியை சமாதி நிலையாக நினைப்பது தவறு. புற அடையாளங்களைக் கொண்டு, சமாதி நிலை உண்மைதானா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. அது சமாதி நிலைதானா என்பது நமக்கே தெரியும். நாம் தவறிப் போகாதிருக்க பகுத்தறிவு என்னும் எதிர் மறை வாதம் ஒரு பாதுகாப்பாக அமைகிறது. எல்லா மதங்களும் பகுத்தறிவைக் கடந்து அப்பால் செல்கின்றன. அந்த நிலையை அடைய்ப் பகுத்தறிவு உதவியாக மட்டும் அமைகிறது. இயல்புணர்ச்சி பனிக்கட்டி போன்றது; பகுத்தறிவு தண்ணீர் போன்றது; சமாதிநிலை என்பது நுண்ணியது, நீராவி போன்றது. ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று வருகிறது. இந்த வரிசைக்கிரமம் நித்தியமாக இருந்து வருகிறது. உணர்வின்மை, உணர்வு, அறிவு, சடம், உடல், மனம் என அமைந்துள்ள சங்கிலித் தொடரில் நாம் பற்றிக் கொள்ளும் வளையமே நம்மைப் பொறுத்த வரையில் தொடங்கும் இடம் ஆகிறது. இரு கட்சியினரின் கூற்றுகளும் சமஉண்மையானவை; இந்த இரு சாராரின் கூற்றுக்களையும் கடந்து, இரண்டும் அற்ற நிலைக்கு நாம் செல்லுதல் வேண்டும். இந்தத் தொடர்ச்சிகள் எல்லாம் மாயையே.

# 16 கிராம் கொண்ட மிகச் சிறிய விமானங்கள் உருவாக்கம்



இராணுவ உளவுத் தேவைகளின்போது காணொலி பதிவுகளை செய்யக்கூடியதும், சட்டைப்பையில் வைத்து எடுத்துச்செல்லக் கூடியதுமான சிறிய ரக விமானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்க இராணுவத்தினரால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ட்ரோன் வகை விமானங்கள் 16 கிராம் களே எடை உடையனவாகக் காணப்படுகின்றன. மேலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பான 3 கமராக்களைக் கொண்டுள்ள இந்த விமானங்கள் ஜி.பி.எஸ். வசதியையும் உள்ளடக்கியுள்ளது. இவை தொடர்ச்சியாக 20 நிமிடங்கள்வரை பறந்து தகவல்களைச் சேகரித்து வழங்கக்கூடியன என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | | | | |
| 6 | 3 | | 1 | | | 9 | | 4 |
| | | 5 | 2 | 8 | | 1 | | |
| 7 | | | | 2 | 6 | | 4 | 8 |
| 5 | | 9 | | 4 | | 6 | | 1 |
| 4 | 8 | | 5 | 3 | | | | 7 |
| | | 1 | | 6 | 5 | 4 | | |
| 3 | | 7 | | | 2 | | 5 | 9 |
| | | | | | | 3 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 7 | 2 | 4 | 1 | 3 | 9 | 5 |
| 5 | 3 | 4 | 7 | 9 | 6 | 1 | 2 | 8 |
| 1 | 9 | 2 | 5 | 3 | 8 | 7 | 6 | 4 |
| 9 | 4 | 8 | 1 | 7 | 5 | 6 | 3 | 2 |
| 7 | 6 | 5 | 3 | 2 | 9 | 4 | 8 | 1 |
| 3 | 2 | 1 | 8 | 6 | 4 | 5 | 7 | 9 |
| 2 | 1 | 6 | 4 | 8 | 3 | 9 | 5 | 7 |
| 4 | 7 | 9 | 6 | 5 | 2 | 8 | 1 | 3 |
| 8 | 5 | 3 | 9 | 1 | 7 | 2 | 4 | 6 |

## கைதடி வளர்மதி வி.க. கரப்பந்துத் தொடர்

# சம்பியன் கிண்ணம் ஐங்கரன் வசம்




யாழ்ப்பாணம், ஓக.4
கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் சம்பியன் பட்டத்தை மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் தட்டிச் சென்றது.

கடந்த வியாழக்கிழமை கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது.

சிறந்த வீரருக்கான விருது மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி வீரர் வினோஷனுக்கு வழங்கப்பட்டது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஓக.4
தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நயினை இஸ்லாமிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை இஸ்லாமிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. (ற-23)

+++

யாழ்ப்பாணம், ஓக.4
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் லீக் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

## உதைபந்து ஆட்டங்களின் முடிவுகள்




யாழ்ப்பாணம். ஓக.4
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணிக்கும் நவசக்தி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)


## பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக.4
மன்னார் நட்புறவுச் சங்கதின் அனுசரணையுடன் மன்னார் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தோட்டவெளி ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## கரப்பந்துச் சுற்றுத் தொடரின் முடிவுகள்



யாழ்ப்பாணம், ஓக.4
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் நேற்றுமுன்தினம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழக அணிக்கும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் தொண்டமானாறு பொன்ஒளி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் தமிழ் மதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகஅணி2:0என்றசெற்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# கிண்ணம் வென்றது முல்லை. சென்.யூட்



யாழ்ப்பாணம், ஓக.4
முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரராக முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக் கழக வீரர் ஸ்ரீயும், தொடர் ஆட்ட நாயகனாக முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணி வீரர் விவேக்கும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## யாழ். உதைபந்து லீக் வென்றது

யாழ்ப்பாணம், ஓக.4
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி வெற்றியீட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி களமிறங்கியது.

அதில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## குருநகர் பாடும்மீன் உதைபந்துத் தொடர்

# மாபெரும் இறுதியாட்டம் இன்று மாலை யாழ். பல்கலை, சென்.மேரிஸ் களத்தில்



நாவாந்துறை சென்.மேரிஸ் அணி வீரர்கள்

யாழ்ப்பாணம், ஓக.4
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன்.விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் களமிறங்குகின்றன.

இந்த இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்ட ஆரம்ப நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மறைக் கோட்ட குரு முதல்வரும் யாழ்.மரியன்னை தேவாலய பங்குத் தந்தையுமான சகாயநாயகம் அடிகளாரும், சிறப்பு விருந்தினர்களாக குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தை நேசராஜா அடிகளாரும், யாழ்.மாநகர சபையின் முன்னாள் துணை முதல்வர் இளங்கோ ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-23)



யாழ்.பல்கலைக் கழக அணி வீரர்கள்

# தோற்றால் விமர்சிப்பதா?


கங்குலி

டெஸ்ட் தொடரின் ஒரு போட்டியில் தோற்றதற்காக விமர்சனம் செய்யும் அனைவருக்கும் இந்திய அணி மீண்டும் வந்து பதிலடி கொடுக்கும் என கங்குலி கூறியுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்தியா முதல் டெஸ்ட் போட்டியில் சமநிலை செய்தது. லோர்ட்ஸில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் அசத்தலாக வென்ற இந்திய அணி. சமீபத்தில் நடந்த 3ஆவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வியடைந்தது.

இந்தத் தோல்வியால் ரசிகர்களின் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது இந்திய அணி. இந்த நிலையில் இந்தத் தோல்வி குறித்து முன்னாள் அணித் தலைவர் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில். லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி அபாரமாக செயற்பட்டது. ஆனால் 3ஆவது டெஸ்ட் போட்டியில் 5 நாள்களும் இங்கிலாந்து அணியே முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வெல்வது முக்கியமானது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.


இந்தத் தோல்விக்காக இந்திய அணியை விமர்சிப்பவர்கள் எல்லோரும், சரிவில் இருந்து மீண்டு இந்திய அணி நல்ல பதிலடி கொடுக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. சவுதம்டன் போட்டியில் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இங்கிலாந்து அணி 10 டெஸ்டுகளுக்கு பிறகு முதல் வெற்றியை ருசித்தது.

2011ஆம் ஆண்டில் இருந்தது போல் வலுவான அணியாக இங்கிலாந்து தற்போது இல்லை என்பதையும். அதனை வீழ்த்த முடியும் என்பதையும் இந்திய அணியினர் அறிவார்கள்.

நெருக்கடியை நினைத்துக் கொண்டு இருக்காமல் இந்தச் சூழ்நிலையை எங்களால் நிச்சயம் மாற்ற முடியும் என்று உறுதிபடக் கூறிய இங்கிலாந்து அணித் தலைவர் குக்கின் பேச்சு உண்மையில் என்னைக் கவர்ந்தது. இது மன உறுதிக்குக் கிடைத்த வெற்றி என்று தான் நான் சொல்வேன்.

என்னுடைய காலத்தில் விளையாடிய சிறந்த துடுப்பாட்டக்காரராக இருந்த குக் வருங்காலங்களில் சூழ்நிலைக்குத் தகுந்தபடி தனது ஆட்டத்தை விரைவாக மாற்றிக் கொள்வார் என்று நம்புகிறேன்.

அதேசமயம் அண்டஸனின் பந்து வீச்சில் வித்தியாசத்தன்மை இல்லை. ஆனால் துல்லியமான இலக்கில் வீசுவது தான் அவரது பலம். அவரது பந்து வீச்சை விளாசுவதற்குரிய வழி முறையை இந்திய வீரர்கள் கண்டறிய வேண்டும். அடுத்த டெஸ்டில் எந்த மாதிரியான அணியைக் களம் இறக்குவது குறித்து இந்தியா சிந்திக்க வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார். (த)



## பெரும் நிதி நெருக்கடியில் மன்செஸ்டர் யுனைட்டட்

பிரபலமான உதைபந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டட் பெரும் நிதி இழப்பு ஒன்றைச் சந்திக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்தக் கழகத்தின் பிரதான அனுசரணையாளராகக் காணப்படும் பிரபல விளையாட்டு ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்று, மென்செஸ்டர் யுனைட்டட்டுடன் 750 மில்லியன் பவுண்ஸ்கள் பெறுமதியான ஒப்பந்தத்தை மேற்கொண்டு சாதனை படைத்திருந்தது.

எனினும் தற்போது 2015-2016ஆம் ஆண்டுகளுக்கான சம்பியன்ஸ் லீக் தொடருக்கு மென்செஸ்டர் யுனைட்டட் கழகம் தெரிவாகாத பட்சத்தில், ஒப்பந்த தொகையில் 30 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரீமியர் லீக் தொடரில் இருந்து வெளியேற்றப்படும் பட்சத்தில், ஒப்பந்தம் முழுமையாக ரத்துச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


## சந்திமால், மெண்டிஸ் நீக்கம்

பாகிஸ்தானுடனான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்ற இலங்கைக் குழாமின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட இந்தக் குழாமில் இலக்குக் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான தினேஷ் சந்திமால், சுழற் பந்துவீச்சாளர் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் இடம் பெறவில்லை.

தென்னாபிரிக்காவுடனான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் தினேஷ் சந்திமாலுக்கு பதிலாகச் சேர்க்கப்பட்ட நிரோஷன் டிக்வெல்ல. பாகிஸ்தானுடனான போட்டிகளுக்கும் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை. சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸூம் தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் பிரகாசிக்கத் தவறியதையடுத்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக வேகப் பந்துவீச்சாளரான நுவன் பிரதீப் அணியில் இடம்பெறுகிறார். காயம் காரணமாக தென்னாபிரிக்காவுடனான 2 ஆவது போட்டியில் விளையாடாத ஷமிந்த எரங்க, சுரங்க லக்மால் ஆகியோர் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் இந்த இரு வீரர்களும் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவது அவர்களின் உடற் தகுதி நிலையில் தங்கியுள்ளது. (த)



# லோர்ட்ஸ் வெற்றிக்குப் பிறகு 5 நாள்கள் என்ன செய்தார்கள்?

லோர்ட்ஸ் டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றி பெற்ற பின். அடுத்த போட்டி தொடங்குவதற்கு இடைப்பட்ட 5 நாள்களும், இந்திய அணியினர் என்ன செய்து கொண்டிருந்தனர் என, இந்திய முன்னாள் தலைவர் கவாஸ்கர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சௌதாம்ப்டன் டெஸ்டில் இந்திய அணி 266 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் படுதோல்வியடைந்தது குறித்து அவர் தெரிவிக்கையில்-

லோர்ட்ஸ் டெஸ்டில் நாம் இங்கிலாந்தை முற்றிலுமாகச் செயலிழக்கச் செய்தோம். ஆனால், சௌதாம்ப்டனில் அவர்கள் மீண்டு வருவதற்கு உதவி செய்து விட்டோம்.

3ஆவது டெஸ்டில் இந்திய அணி எதிர்ப்பின்றி பணிந்து விட்டது. லோர்ட்ஸ் டெஸ்ட் முடிந்த பின் ஐந்து நாள்களாக இந்திய அணி என்ன செய்து கொண்டிருந்தது எனத் தெரியவில்லை.

ஒரு வெற்றி பெற்ற பின் தன்னிறைவு-அடைந்து விடுவது 1930 இல் இருந்தே இந்திய அணிக்கு வாடிக்கையாகி விட்டது.



ஒரு வெற்றி பெற்ற பின் தன்னிறைவு அடைந்து விடுவது 1930 இல் இருந்தே இந்திய அணிக்கு வாடிக்கையாகி விட்டது. வெற்றிக்குப் பின் தன்னிறைவு அடைந்து விடக் கூடாது. இந்த பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும். அலெஸ்டர் குக் கொடுத்த பிடியை நழுவ விட்டு அவரை தகுதி நிலைக்குத் திரும்ப அனுமதித்து விட்டனர். ஸ்லிப் களத்தடுப்பு உள்பட பல விடயங்கள் குறித்து ஆய்வு செய்ய வேண்டி உள்ளது.

மோசமான துடுப்பாட்டம் தான் தோல்விக்குக் காரணம் என்பதை இந்திய அணி புரிந்து கொள்ள வேண்டும். ஸ்லிப்பில் பிடிகளைத் தவற விடாமல் இருந்திருந்தால் பந்து வீச்சாளர்கள் எழுச்சி பெற்றிருப்பர்.

ரஹானே தவிர்த்து வேறு எந்த வீரரும் நீண்ட நேரம் களத்தில் நிற்கவில்லை. பந்து வருவதற்குள் அவர் துடுப்பைச் சுழற்றவில்லை. பந்து வரும் வரை காத்திருந்து. அதற்குப் பின் அடிக்க முயற்சித்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் ஓட்டங்களைக் குவித்தார். ஆனால், மற்ற வீரர்கள் முரட்டுத்தனமாக அடித்து ஆடி இலக்குகளை இழந்தனர்.

முரளி விஜய், புஜாரா ஆகிய இருவரும் நிலைத்திருந்தால் தோல்வியைத் தவிர்த்திருக்கலாம். விஜய் தேவையில்லாமல் ஆட்டமிழந்து விட்டார்-என்றார். (த)

# சிறகு வலைத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தீர்மானங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.4

கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்களத்தின் மாவட்டக் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ்.மாவட்டத்தில் சிறகு வலைத் தொழிலில் ஈடுபடும் கடற்றொழில்கிராமிய அமைப்பு, கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் சிறகு வலைத் தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சில முக்கியமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி தீர்மானங்களை அனைத்து கடற்றொழிலாளர்களும் அறிந்து கொள்வதோடு நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்ற வகையில் திணைக்களம் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு:


- யாழ். கடல் நீரேரி பகுதியில் இறால் பிடிக்க பெரும்பாலும் கூடு முறை பயன்படுகின்றது. இந்தக் கூடு சிறிய அளவிலான கண்களாலான வலையால் அமைக்கப்படுகின்றது. இதனால் சிறிய இறால்கள், சிறிய மீன்கள் அக்கப்பட்டு பெரிய அளவில் அழிவடைகின்றன. இதனால் யாழ்.மாவட்டப் பகுதியில் கூடு பாவித்து கடற்றொழில் மேற்கொள்ளல் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என சபையினர் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.
- இறால், மீன்கள் பிடிக்கப் பாவிக்கப்படும் சிறிய இழுவை மடிவலைகளை மிக வசதி குறைந்த மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். இந்த மடியில் இரும்புச் சங்கிலி, ஈயக் குண்டுகள் பாவிப்பதால் கடலின் அடித்தளப்படுக்கை வருடப்பட்டு அதன் இயற்கை அமைப்பு அழிவடையும். அத்துடன் அடித்தளத்தில் வாழும் உயிரினங்களும் பாதிப்படையும். இதனைக் கருத்தில் கொண்டு இழுவைமடியில் பாரம் போட்டு (ஈயம், கல், சங்கிலி) இழுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- ஆழம் குறைந்த (பரவைக் கடல்) கடற்பகுதியில் செய்யப்படுகின்ற எந்தவொரு மீன்பிடி முறைக்கும் ஈயம் போன்ற பாரம் கட்டி தொழில் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
- யாழ். கடல் நீரேரி பிரதேசத்தில் சிறகு வலைகள் அதிகரித்துள்ளதால் அவற்றை மட்டுப்படுத்தி ஏனையோருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் முகமாக 15 முழப்பாட்டுக்கு மேல் சிறகு வலை பாய்வது தடை செய்யப்பட்டுள்ளது. கரையிலிருந்து 3 அடுக்கு வலைக்கு மேல் பாய முடியாது.

நிலவலை வரையறை -750 கண் நீளமுள்ள 5 வலைகள் மட்டும் பாயலாம்.

அகலப்பாடு - ஒரு குடும்பத்துக்கு 2 பாடுகள் மட்டும் பாயலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

- சிறகு வலை இறால் கண்டி ஒரு குடும்பத்துக்கு 4 கூட்டம் மட்டும் பாவிக்கலாம். நில வலை 4 பீஸ் மட்டும் பாயலாம்.
- ஆறுகள், நீரோட்ட வாய்க்கால்களினால் வற்றுப்பெருக்கு நேரங்களில் மீன்கள் ஓட்டம் இருப்பதால் அவற்றை தனிநபர் மட்டும் பயன்பெறும் வகையில் ஆறுகள், நீரோட்ட வாய்க் கால்களுக்குத் தடையாக வலை பாய முடியாது.
- கணவாய் பிடிப்பதற்காக பெரிய குழை கொப்புகள் பாவிப்பது, ஏனைய வழிச்சல் வலைத் தொழிலாளர்களது வலைகள் சேதமடைய ஏதுவாக இருப்பதனாலும் ஏனைய தொழில்முறைகளுக்கு இடைஞ்சலாக அமைவதாலும் கணவாய் பிடிக்க குழைகள் பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டது.

மேற்படி தீர்மானங்களை நடைமுறைப்படுத்த உதவுமாறு சகல கடற்றொழிலாளர்களையும் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)




## கேணிகளும் காணாமற் போகும்

பெரும்பாலான எங்கள் ஊர்களின் பெயர்கள் குளம், கேணி என நீர் நிலைகளை இணைத்துக் கொண்டிருக்கும். வெட்டை வெளிகளில் குளங்கள் மட்டுமல்ல கேணிகளும் காணப்பட்டன. கிராமங்களில்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக கேணிகள் இருந்தன. பருவ மழைக்கு முன்னர் தூர் வாரி, கலக்கி இறைத்துப் பேணப்படும் இந்தக் கேணிகளில் மாரியில் நீர் நிறைந்துவிடும். கிராமத்தவர்களது நீச்சல் பயிற்சிக்களமும் இவைதான். சமூகத்தின் பார்வை நவீனத்துவத்துக்குட்படுதல் எனும் பெயரில் கேணிகளிலிருந்து விடுபட்டு "சுவிமிங்பூல்", "பீச்" என்றும் மாறிவிட, ஒல்லாந்தருக்கு இருந்தளவுகூட இவை மீது எங்களுக்கு ஆர்வம் இல்லாது போனமை துர்லபமே.

கால்நடைகளின் கறவை வலு அதிகரிப்புக்கு அவை அருந்தும் நீரும் அவசியமானதொன்றாகும். கோடையில் குளங்கள் வற்றி நீர் குறைந்தாலும் கேணிகளில் ஊற்று நீர் இருக்கும். கால்நடைகள் இலகுவாக இறங்கிச் சென்று நீர் அருந்திவிட்டுத் திரும்புவதற்கேற்றாற்போல் இந்தக் கேணிகளின் முன்பக்கம் சாய்தளமாக அமைக்கப்பட்டிருக்கும். சில தனிப்பட்டவர்கள் மட்டுமல்ல பொது அமைப்புகள்கூட இடப்பற்றாக்குறையைச் சாட்டாக வைத்து கேணிகளை மூடவும் ஒடுக்கவும் முற்பட்டமையும், குப்பை கூளங்கள், தலைமயிர் மூடைகள், பீங்கான், தகரக்கழிவுகளின் களஞ்சியங்களாகி, தூர்ந்தும் காணாமற் போய்விட்ட இந்தக் கேணிகளைத் தேடிக் கால்நடைகள் அலைகின்றன.

எமது மண்ணின் நீர் வளப் பாதுகாப்புப் பற்றி புத்திஜீவிகளால் தெரிவிக்கப்பட்டவை யாவும் தூர நோக்கைத் தவிர்த்ததாலும், குறுகிய நோக்கின் விருப்பினாலும் "மாட்டுக்கு மாடு சொன்ன கதை"யாகிவிட்டது. "குடாநாட்டின் நீர்வளம் ஏரி, குளம், கிணறு போன்றவற்றில்தான் தங்கியுள்ளது. அவற்றைத் தூர் நீக்கித் தூயதாக்குங்கள்" என வடக்கு மாகாண முதலமைச்சராலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமது எல்லைகளுக்குள் இருக்கும் கேணிகளும் காணாமற் போகுமுன் அவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கும் செயற்பாடுகளைக் கிராமிய பொது அமைப்பு களுடன் இணைந்து பிரதேச சபைகளாவது மேற்கொள்ள லாமே. கடல் வற்றினால் மழை வருமாம்; ஏனைய நீரகங்கள் வற்றினால் வறுமையும் வெறுமையும் கை கோர்த்து வரும்.

செல்வவேலாயுதம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (06.07.2014) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் சபாரெத்தினம் அங்குசபாலன்**

தோற்றம் 28★05★1937 மறைவு 06★07★2014

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.08.2014) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் பேரன்புடன் அழைக்கின்றோம்.

3 ஆம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் பத்மநாதன் வீஷ்மானந்தர்**

(முன்னாள் உரிமையாளர் ஐங்கரன் இசைக்குழு)

மலர்வு 30.05.1977 உதிர்வு 02.08.2006

திதி:அட்டமி

என் உயிரே! என் உறவே! என் மூச்சுக் காற்றே!
எட்டாண்டுகள் ஆகிவிட்டதடா
நீ எம்மையெல்லாம் விட்டுச் சென்று
எட்டாத தூரத்திற்குச் சென்றாலும்
என்றும் உன் நினைவுகள் எம்முடன் இருக்கும்
என்றும் உன் நினைவுகளோடு


74, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (50444)(4.6)

அம்மா, அப்பா, சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி அழகராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கோயிலாக்கண்டி, கைதடியைப் பிறப்பிடமாகவும் வெளிச்ச வீட்டு முகப்பு, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது புகையிரத நிலையவீதி, கோண்டாவில் மேற்கில் வசித்துவந்தவருமான சின்னத்தம்பி அழகராஜா நேற்று (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் மகனும், செல்லையா- சௌந்தரிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தனலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி குணராஜசிங்கம், செல்லையா அழகபூசணி மற்றும் கமலநாதன் குணபூசணி ஆகியோரின் சகோதரனும், தனபாலரத்தினம்(கிராம உத்தியோகத்தர், நவாலி வடக்கு), காலஞ்சென்ற கலைவாணி ஆகியோரின் தந்தையும், திருமகளின் (ஆசிரியை, கோண்டாவில் இந்துக்கல்லூரி), மாமனும், பூங்குழலி (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, உயர்தரம்), ஆதவன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி, உயர்தரம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தில்லைஸ்தான்"
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு. (50568)(45..6)

தகவல்: குடும்பத்தினர்.

## குடும்பஸ்தரை தாக்கிய குளவிகள்

தென்மராட்சி, ஓக.4

வளவுக்குள் வீழ்ந்து காணப்பட்ட பனையோலையை எடுத்த குடும்பஸ்தர் அதனுள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகளால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மந்துவில் வடக்கில் இடம் பெற்றது.

கருங்குளவிகளால் தாக்கப்பட்டவர்வரணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மந்துவில் வடக்கைச் சேர்ந்த வேலாயுத பிள்ளை புவிச்சக்கரவர்த்தி(வயது-38)என்னும் குடும்பஸ்தரே குளவிகளால் தாக்கப்பட்டவராவார். (வ-9)

## தாமதப்படும் மின் விநியோகம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் இடம்பெறமாட்டாதா என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதி புனரமைக்கப்படும் இந்த வேளையிலாவது தமக்கு மின்சாரத்தை வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(க-500)

## நன்றி நவிலல்



திருமதி
**சரஸ்வதியம்மா தேவராஜா சர்மா**

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகக் கொண்ட தே.பாலச்சந்திரன் (கிராம அலுவலர் ஜே/51) அவர்களின் தாயாரின் மரணச் செய்திகேட்டு தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், 27.07.2014 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், வேண்டிய உதவிகளை உடனுக்குடன் செய்துதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை.
021 373 7637, 077 703 3360

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**அமரர் இராசா பாக்கியம்**

மலர்வு 21.08.1946
உதிர்வு 06.07.2014

திதி: அட்டமி



கடந்த 06.07.2014 சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் இராசா பாக்கியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.08.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்
தொ.பே. 021 491 8873

## 'மாம்பழக் காட்சி' இறுவட்டு வெளியீட்டு விழா

வடமராட்சி, ஓக.4.
கவிஞர் க.எதிர்வீரசிங்கம் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் மீது பாடிய 'மாம்பழக்காட்சி' என்னும் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு க.பாரிவள்ளல் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியர் சி.க.லோகநாதன், சி.கணேசலிங்கம் ஆகியோர் ஆசியுரைகளை வழங்க, விரிவுரையாளர் க.இராஜேஸ்கண்ணன் வெளியீட்டுரையையும், கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள். 'மாம்பழக்காட்சி' இறுவட்டுப் பாடல்களை யாழ். நுண்கலைப் பீட விரிவுரையாளர் தவநாதன் றெபேட் பாடியுள்ளார். (ஓ-173)


## தெய்வீக இசை விருந்து



இன்று (04.08.2014)
திங்கட்கிழமை
மாலை 5.30 – 9.00 மணிவரை
நல்லை திருஞானசம்பந்தர்
ஆதீனத்தில்
இந்தியாவின் மங்களூரிலிருந்து
வருகை தந்துள்ள
SAXOPHONE BROTHERS
நாத கலா இரத்தின P.K. கணேஷ்
(காமகோடி பீட ஆஸ்தான வித்துவான்)
நாதவிசாரதே P.K. தாமோதர்
மற்றும் ஈழத்து தவில் வித்துவான்கள்
லயஞான தவில் அரசன் : N.R.S.சுதாகர்
தவில் நாத நந்திகேஸ்வரன்: B.நர்மதன்
ஆகியோரின் இசைவிருந்து நடைபெறும்.
நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் யாழ்ப்பாணம்
(50563)(4.3.6) SAXOPHONE BROTHER'S
R.Y.நவரூபன் R.Y.காண்டீபன் T.P:077 635 4197

## விற்பனையாகிறது

யாழ்ப்பாண வாழ்வியல் குறித்துப்
பேசும் நூல் வேதநாயகம் தபேந்திரனின்
யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - I
விலை 390/=
நாடெங்கும் பிரபல புத்தகசாலையில் கிடைக்கும்.
(சி/15310) (45.6.3)

## விடு காணி விற்பனைக்கு

இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு (நல்லூர்) இல் அமைந்திருக்கும் வீட்டுடன் கூடிய 7½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 673 6124 (50572) (45.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து 83ஆம் ஆண்டு பிறந்த லக்கினத்தில் சூரியன் செவ்வாய் கிரகபாவம் 61 உடைய கொழும்பில் அரச உயர் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 021 205 9633 (சி/115591) (4.6.3)

## Personal Class

தரம் 3-முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (50556) (4.3.5.)
ஏனைய பாடங்களுக்கும் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு: மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 077 836 1521

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 203 5424 (50569) (4.3.6.)


## கண்ணீர் அஞ்சலி



எமது தேசிய கல்வியியற் கல்லூரியினது
'நாடகமும் அரங்கியலும்' துறையின்
சிரேஷ்ட விரிவுரையாளர்
க. திலகநாதன் அவர்களின்
அருமைத் தாயாரான
திருமதி கைலாசபதியம்மா
கைலாயநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் வித்தக விநாயகப் பெருமானைப் பிரார்த்திக் கின்றோம்.

நலன்புரி சங்கம்,
யாழ். தேசியகல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
(50571) (45.6.3)

## திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீ நீலாய தாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி தேவஸ்தானம்
### யாழ்ப்பாணம், இலங்கை
### மிக முக்கிய அறிவித்தல்

சிவனடியார்களே!
மேற்படி எமது ஆலயத்தின் பெயரைக் குறிப்பிட்டு **திருப்பணிநிதி, பொதுப் பணிநிதி, பொருள்காணிக்கை** போன்றவற்றை வசூலிப்பதாக அறிந்துள்ளோம். இவ்விடயம் சம்பந்தமாக "ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ" எமது ஆலயத்தின் பெயரில் நிதி பொருள் என்பவற்றை வசூலிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.
தயவு செய்து ஆலயத்திற்கு பொருள், நிதி போன்றவற்றை வெளிநாட்டிலிருந்தோ அல்லது உள்நாட்டிலிருந்தோ வழங்க விரும்பும் அடியார்கள் நேரடியாக தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.
மேற்படி தேவஸ்தானத்தின் அனுமதி இன்றி வழங்கப்படும் பொருள்கள் நிதிகளுக்கு தேவஸ்தானம் பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம.

(50570) (3.6.4) T.P:0094 21300 8872/0094776306119 தேவஸ்தானம்

# மரண அறிவித்தல்



## திருமதி கயிலாசபதியம்மா கயிலைநாதன்

யாழ்ப்பாணம், மாவடி, பொலிகண்டி, வல்வெட்டித் துறையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கயிலாசபதியம்மா கயிலைநாதன் கடந்த (02.08.2014) சனிக்கிழமை மட்டக்களப்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஓவசியர் அமிர்தலிங்கம், கயிலைநாதன் (நீர்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், தெய்வசிகாமணி, சித்திவினாயகம், சிவானந்தம் மற்றும் காலஞ்சென்றவர்களான வடிவேல் மகேஸ்வரி, திருமேனிப்பிள்ளை தங்கரத்தினம், சிவசாமி, வன்னிவடிவேல் ஆகியோரின் அன்புச்சகோதரியும், அம்மன்கிளி முருகதாஸ் (பேராசிரியர், கிழக்கு பல்கலைக்கழகம்), திருக்கேதீஸ்வரநாதன்(லண்டன்), திருக்குமரநாதன்(லண்டன்), கணேசநாதன் (லண்டன்), திலகநாதன்(விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியற் கல்லூரி), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தசாமி முருகதாஸ் (முகாமையாளர், சாந்தி சினிமா), விஜயலதா, வளர்மதி, துளசி, சிவாஜினி(ஆசிரியை, கிளிநொச்சி மத்திய கல்லூரி), ரேவதி ஆகியோரின் அன்பு மாமியும் தணிகைச் செல்வன் (விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்), லக்ஷ்மணன் (யுனிலிவர், Srilanka), விஜயங்கா (விரிவுரையாளர், இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவகம், மட்டக்களப்பு) அருள்மொழிவர்மன், ரூபிகா கிருஷ்ணமேனன், விமல்ராஜ், யோகவதனி, விஜய், விது, அச்சுதன், பாரதி, ஜனரஞ்சித், ரஞ்சித்குமார், பவித்திரா, ஜனனி, நயனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரணவன், ஆகாஷ் ஆகியோரின் ஆசைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2014) திங்கட்கிழமை 2 ஆம் குறுக்கு கல்லடி கடற்கரை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 3.30 மணியளவில் மட்டக்களப்பு நாவலடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் குறுக்கு, கல்லடி கடற்கரை வீதி, திருச்செந்தூர், மட்டக்களப்பு.**

தொலைபேசி: + 946 522 24051 (மட்டக்களப்பு)
+442 0868 661375/ +447956564714 +447515944659/ +447801503500 (லண்டன்) (சி/15312)(4.6.3)


தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்










### தமிழ்

ஆறு மாத காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் போதியளவு மாணவர்களை இணைப்பதற்கு இடமில்லை எனத் தெரிவித்து கற்கை நெறி ஈரு பிரிவுகளாக்கப்பட்டது. முதல் பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, ஆறு மாதங்கள் முடிந்தபோதும், இரண்டாவது பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தது. அதையடுத்து மாணவர்கள் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, இரண்டாவது பிரிவு மாணவர்களின் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது பிரிவில் 20 தமிழ் மாணவ - மாணவியர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தில் ஒரே தடவையில் அதிகளவான தமிழ் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டமை இதுவே முதல் முறை.

இந்த நிலையில் கடந்த மாதம் 20 ஆம் திகதி, பண்டாரா விடுதியில், புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 20 தமிழ் மாணவ - மாணவியரின் பெயர் குறிப்பிட்டு எச்சரிக்கை துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறாவிட்டால் வெட்டிக் கொல்லப்படுவர் என்றும், மாணவியரை வன்புணர்வுக்குள்ளாக்குவோம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கொச்சைத் தமிழிலும், சிங்களமும் கலந்து எழுதப்பட்ட துண்டுப் பிரசுரம் விடுதியில் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தது. குறித்த விடுதியின் பாதுகாப்புக்கு விசேட ஊழியர் நியமிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்தத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் நிர்வாகத்தினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பின்னர் ஞந்த சனிக்கிழமையும் அவ்வாறான துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில், எச்சரிக்கை விடுக்கப்பட்ட 20 மாணவர்களுள் ஒருவரான சுதர்சன், இயற்கைக் கடன் கழிப்பதற்காக விடுதியை விட்டு வெளியே வந்தபோது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இதன் போது அங்கு நின்ற முகமூடி அணிந்த சில மாணவர்கள் சுதர்சனை கடுமையாகத் தாக்கியுள்ளனர். நெஞ்சுப் பகுதியிலும், முதுகுப் பகுதியிலும் கத்தியால் வெட்டியுள்ளனர்.

"துண்டுபிரசுரம் ஒட்டிக்கொண்டிருந்த சிலரே தாக்குதல் நடத்தினர். அவர்கள் முகத்தில் மப்ளர் அணிந்திருந்தனர். தாக்கிய பின்னர் கழுத்தை இறுக்கிக் கட்டினர். பின்னர் மயக்கமாகிவிட்டேன். தாக்குதல் நடத்தியவர்கள் 30 முதல் 35 வயதுக்கு உட்பட்ட தோற்றத்தை கொண்டவர்கள். அவர்களில் ஒருவர் உடலில் பச்சை குத்தியிருந்தார். அவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்" - என்று தாக்கப்பட்ட மாணவர் தெரி வித்துள்ளார்.

தாக்குலுக்கு இலக்கான சுதர்சன் அரை மணித்தியாலத்தின் பின்னர் மயக்கம் தெளிந்து தவழ்ந்து சென்று தனது நண்பர்களுக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்தே பலாங்கொட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிய வருகின்றது.

இந்தத் தாக்குதல் விடுதியில் பாதுகாப்பு ஊழியர் இருக்கத்தக்கதாகவே நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பில் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

அதேவேளை, அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டபோது தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்குமூலத்திலேயே தம்மிடம் கையெழுத்துப் பெறப்பட்டது என்று தெரிவித்துள்ள துண்டுப்பிரசுரம் மூலம் அச்சுறுத்தப்பட்ட தமிழ் மாணவர்கள், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து தமக்கு எதுவுமே தெரியாது என்று தெரிவித்துள்ளனர். தாம் முறைப்பாட்டைச் செய்த சமயம், இந்த அச்சுறுத்தலை நீங்களே திட்டமிட்டு நடத்தியுள்ளீர்கள். வேறு பல்கலைக் கழகத்துக்கு மாறுவதற்காகவே இவ்வாறு செய்துள்ளீர்கள் என்று பொலிஸார் கூறினர் என்றும் அந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-5)

### ஐ.நா வின்

அதில் உரையாற்றவுள்ள உலகத் தலைவர்களின் உரை தொடர்பான உத்தேச நிகழ்ச்சி நிரல் வெளியாகியுள்ளது. அதன்படி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவதற்கு, செப்ரெம்பர் 25 ஆம் திகதி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நாளன்று பாகிஸ்தான், கனடா, ஈரான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும் உரையாற்றவுள்ளனர்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட தலைவர்கள் முதலாவது நாள் உரையாற்றவுள்ளனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உரை செப்ரெம்பர் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது அமர்வு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதன்போது, இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்ட விசாரணை அறிக்கை வாய்மொழி மூலமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஐ.நா பொதுச் சபையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐ.நா பொதுச் சபைக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பாரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

கடந்த 2012 ஆம் ஆண்டு, நியூயோர்க்கில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராகப் போராட்டம் நடத்த புலம்பெயர் தமிழர்கள் ஏற்பாடு செய்திருந்த நிலையில், ஜனாதிபதி ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்வில்லை. அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சரே உரையாற்றியிருந்தார்.

எனினும், கடந்த ஆண்டு ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்று உரையாற்றியிருந்தார். இந்த ஆண்டு இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற அறிக்கை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படும் வேளையில், பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பாரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படாமலேயே உள்ளது. (ற-5)

### உள்ளக

இலங்கையின் உள்ளக போர்க் குற்ற விசாரணையின் போது சாட்சியமளிக்க முடியுமா என்று ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவிடம் 'உதயன்' வினவியது.

அதற்கு அவர், 'அரசு தடை செய்திருந்ததென்றால் சாட்சியம் வழங்க முடியாது தான். அப்படியிருந்தாலும் நானும் நினைக்கின்றேன்' என்று பதிலளித்தார்.

அதேவேளை, இலங்கை அரசின் உள்ளக விசாரணை சர்வதேசதரம் வாய்ந்ததாக அமைய வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை அலுவலகம் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் வலியுறுத்தியுள்ளன. (ற-5)

### காணாமற்

ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும், இது இரகசியமாகவே மேற்கொள்ளப்படும் என்றும், எப்போது சாட்சியமளிப்பு இடம்பெறும் என்பதைப் பற்றி எந்தவொரு பகிரங்க அறிவித்தலும் விடுக்கப்படாதெனவும், காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் மேலும் தெரிவித்தார். (ற-5)

### நியதிச்

கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அதில் தேநீர் இடைவேளைக்கு முன்பதாக வரைபு நிதி நியதிச் சட்டம் 2 ஆவது வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் குழுநிலை விவாதமும், தொடர்ந்து சட்ட வரைபு அங்கீகாரத்துக்கும் விடப்படவுள்ளது.

தேநீர் இடைவேளையின் பின்னர் வரைபு - முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டம் 2 ஆவது வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் குழுநிலை விவாதமும், தொடர்ந்து சட்ட வரைபு அங்கீகாரத்துக்கும் விடப்படவுள்ளது. அத்துடன் அமர்வு முடிவடையவுள்ளது. (ற-5)

### மீன்பிடியியல்

அமைக்கப்பட்டு 8 மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில் தற்போதே, மேற்படி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு நடத்துவதற்குரிய அனுமதிகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. (வ-5)

### தீவிரவாதத்துடன்

செய்யும் மூன்று பேர் பற்றிய தகவல்களை இந்தியா கோரியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தியாவினால் சுமத்தப்பட்டு வரும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அது குறித்து கருத்து வெளியிடப் போவதில்லை எனவும் பாகிஸ்தான் அறிவித்துள்ளதுடன், இந்தியா கோரியவாறு தகவல்களை வழங்க வேண்டிய அவசியம் எதுவும் இலங்கைக்கு கிடையாது என்றும் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் 2010ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சட்ட விவகாரங்கள் தொடர்பில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய இரு நாடுகளுக்கும் இடையில் இவ்வாறான தகவல்களை பரிமாறிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியா அனுப்பி வைத்த கடிதம் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து அதன் ஆலோசனைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவால் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய அதிகாரி என்ற காரணத்தினால் தகவல்களை வழங்கினால் பாகிஸ்தானுடனான உறவுகளில் விரிசல் ஏற்படக்கூடிய அதே வேளை, தகவல்களை வழங்கவிட்டால் இந்தியாவுடன் முறுகல் நிலைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

### சாவகச்சேரி

வரப்பட்டு இன்றுவரை சபையால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1940 களில் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட 7 வரி வசூலிப்பாளர்கள் கடமையாற்றி வந்தனர். பின்னர் நியமிக்கப்பட்ட வரி வசூலிப்பாளர்கள் சமயா சமய வரி வசூலிப்பாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். தவிர்க்க முடியாத காலங்களில் மட்டும் குறுகிய காலப் பகுதிகளில் சந்தை குத்தகைக்கு விடப்பட்ட போதிலும், கடந்த 60 ஆண்டுகளாக சாவகச்சேரி கிராமச் சங்கம், பட்டின சபை, நகர சபைகளினால் சந்தை காலத்துக்குக் காலம் நடத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு வடமாகாண சபையால் உள்ளூராட்சி சபைகளுக்கான ஆளணி பட்டியல் தயாரிக்கும்போது ஏனைய சபைகளில் வரி வசூலிப்பாளர் பதவிகள் இல்லாததால் சாவகச்சேரி நகர சபையில் தொழும்பு உள்ளூராட்சி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட வரி வசூலிப்பாளர்கள் பதவிகளை வெறிதாக்கி இல்லாமல் செய்யப்பட்டது.

இருப்பினும் யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி நகரசபை மட்டும் சந்தையைக் குத்தகைக்கு கொடுக்காமல் தொடர்ந்து வரி வசூலிப்பாளர்கள் மூலம் பொது மக்களின் நன்மதிப்புடன் சந்தையில் கணிசமான வருமானத்தைப் பெற்று வருகின்றது.

இதனால் சபையின் ஆளணிப் பட்டியலில் வெறிதாக்கப்பட்ட 17 வரி வசூலிப்பாளர்கள் பதவிகளையும் மீண்டும் உருவாக்க மாகாண உள்ளூராட்சி அமைச்சருக்கு அறிவிக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (வ-9)

### காங்கிரஸ்

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த அவதூறு கட்டுரை மற்றும் ஒளிப்படம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பப்பட்ட கேள்விக்கு, அந்த இணையதளத்தில் தங்களுக்கே தெரியாமல் இந்த கருத்து வெளியானதாக இலங்கை அரசு கூறுகிறது. இது நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. மீண்டும் இதுபோன்ற தவறு நடந்தால் மத்திய அரசு அதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. இலங்கை அரசு தற்போதைய இந்திய அரசை பழைய காங்கிரஸ் அரசை போல் நினைக்க வேண்டாம்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### 7 மாதங்களில்

சினை போன்றவற்றினாலேயே அதிக தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தற்கொலைகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை மார்ச் மாதம் புகையிரதத்தில் மோதுண்டு இறந்த இரு ஆண்களில் ஒருவரின் சடலம் இனம் காணப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

### இலங்கை

வதையோ அல்லது கொச்சைப்படுத்துவதையோ வழக்கமாக கொண்டுள்ளது.

தொடர்ந்து தமிழர்களின் உணர்வுகளை புறக்கணிப்பதோடு, தமிழக முதல்வரையும் கொச்சைப்படுத்தி வரும் இலங்கை அரசின் ஒட்டுவாலாக விளங்கும் இலங்கை துணை தூதரகம், தமிழ் நாட்டுக்கு தேவையற்ற ஒன்றாகும்.

இந்த துணை தூதரகத்தை உடனடியாக மூடக்கோரி, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் மற்றும் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் இணைந்து இலங்கை துணை தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ் திரையுலகின் அனைத்து துறைகளை சேர்ந்த இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்,நடிகைகள், தொழிலாளர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், விநியோகஸ்தர்கள், மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் ஆகிய அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-14)

### இலங்கைக்கு

காப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியான கட்டுரையின் எதிரொலியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் விமான நிறுவனத்தின் பணியகம் தாக்கப்பட்ட சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் இலங்கை அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவரும் நிலையில், அங்குள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை நிறுவனங்கள் என்பவற்றுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தன. அதனடிப்படையில் திருச்சியிலுள்ள 'சிறீலங்கன் எயர்லைன்ஸ்' நிறுவனத்துக்கும் மேலதிக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

எனினும், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஒரு குழுவினர் திடீரென 'சிறீலங்கன் எயர்லைன்ஸ்' நிறுவனத்தின் மீது கற்களை வீசித் தாக்கினர். இதில், நிறுவனத்தின் முன்பக்க கண்ணாடிகள் நொருங்கியுள்ளது. (ற-5)

### ஜெயலலிதா

கிறது. அதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை, இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் தனது நியமனத்தை கையளிக்கும் நிகழ்வில், இலங்கைக்கான புதிய தூதுவர் சுதர்சன் செனிவிரத்ன, தற்செயலாக குறித்து மன்னிப்புக் கோரினார் என்றும், கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது. (ற-5)

# தமிழர்கள் எதை இழந்தாலும் கல்வியை இழக்கவே கூடாது

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவிப்பு

அம்பாறை, ஓக.4

வடக்கு, கிழக்கு தமிழர்கள் தங்களுடைய வாழ்வில் அதிக மானவற்றை இழந்திருக்கின்றார்கள். ஆனால் எதை இழந்தாலும் கல்வியை இழந்தவர்களாக தமிழர்கள் ஒரு போதும் இருக்கக்கூடாது - என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன்.

அம்பாறை மாவட்டம் மத்திய முகாம் 4ஆம் கிராமத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடனான கலந்துரையாடல் அறநெறிப் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"நாம் பெறுகின்ற கல்வி ஒழுக்கத்துடன் கூடிய கல்வியாக அமைகின்றபோதுதான் சமூகத்தில் அனைவராலும் மதிக்கப்படுபவர்களாக வாழமுடியும் மாறாக ஒழுக்கமில்லாத கல்வியைக் கற்பதால் நாம் சமூகத்தில் இருந்து என்றோ ஒருநாள் ஒதுக்கப்பட்டுவிடுவோம்.

கலாசார சீர்கேடுகள் வடக்கு, கிழக்குமாகாணங்களில்மலிந்து கிடக்கின்றன. நாட்டிலே போர் இடம்பெற்ற காலத்தில் கூட இன்று உள்ளதைப் போன்ற கலாசார சீர்கேடுகள் இருக்கவில்லை.

எமது மாணவச் சிறார்கள் மதப்பற்று மொழிப்பற்றுடன் எமது கலாச்சாரத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கு என்றும் ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருப்பார்கள். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது மட்டும் கடமையல்ல. அவர்கள் நல்வழியில் செல்கின்றார்களா என்பதை அவதானிப்புடன் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரதேசம் எந்த வித அடிப்படை வசதியும் இல்லாதுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கான எந்த நிவாரணமும் இது வரைகாலமும் வழங்கப்படாமல் இருப்பது மிகவும் கவலையளிக்கின்றது. எந்த நிலை வரினும் கல்வியில் இருந்து மட்டும் ஒதுங்கிவிட கூடாது இது ஒன்று தான் எமது சிறந்த சொத்து"- என்று தெரிவித்துள்ளார். (ற)



மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இவ்வாலய உற்சவத்தின் திருவேட்டைத்திரு விழா எதிர்வரும் 8 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ற)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அலுவலராக கடமையாற்றும்
தர்மலிங்கம் கஜஸ்ரீயின் அன்புத் தாயார்

**திருமதி சிவனேஸ்வரி தர்மலிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்
உடுவில்.

பிரதேச செயலாளரும்
அலுவலக ஊழியர்களும்

## கண்ணீர் அஞ்சலி

யா/மல்லாகம் மகா வித்தியாலய
ஆசிரியர் **செல்வி ரேவதி தர்மலிங்கம்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவனேஸ்வரி தர்மலிங்கம்**

அவர்கள் நேற்று (03.08.2014) இறைவனடி சேர்ந்து விட்டார். இச்செய்தி கேட்டு பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரில் உள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/மல்லாகம்.ம.வி., மல்லாகம்.

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

தவிர்க்க முடியாத காரணத்தால் 03.08.2014 அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டு 03.11.2014 அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என அறியத்தருகிறோம்.

அதிபர்-


## பெண்ணுக்கு பேயோட்டிய பிக்கு சிக்கிக்கொண்டார் பொலிஸாரிடம்

மட்டக்களப்பு, ஓக.4

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிவேம்பு கிராமத்தைச் சேர்ந்த அரச ஊழியரான குடும்பப் பெண்ணைக் கடத்தி, கண்ணைக் கட்டி பேயோட்டினார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பௌத்த பிக்கு ஒருவரையும் அவரது துணையாள்கள் மூவரையும் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நேற்று ஞாயிறுக்கிழமை பிற்பகல், பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்தைப் பொலிஸ் பிரிவிலுள்ள விகாரை ஒன்றிலிருந்த வேளையில் கைது செய்யப்பட்டு, ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றில் கடமையாற்றும் மேற்படி பெண்ணைக் கடத்தி, வெலிக்கந்தையிலுள்ள விகாரைக்கு கொண்டு சென்ற பின்னர், அவரது கண்களைக் கட்டிய நிலையில் அவரை மரத்தில் கட்டி வைத்து பேயோட்டினர் என்று சம்பந்தப்பட்ட பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட பெண், நேற்றுப் பகல் முச்சக்கர வண்டியொன்றில் கொண்டு வரப்பட்டு, வாழைச்சேனையில் இறக்கிவிடப்பட்டுள்ளார். அதன் பின்னர் அந்தப் பெண்ணே நேரடியாக ஏறாவூர் பொலிஸ் நிலையம் வந்து தனக்கு நடந்த கதி பற்றி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேக நபர்களான பிக்குவும் அவரது துணையாள்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

தான் பூரண சித்த சுவாதீனம் உடையவர் என்று தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ற)


## திருமண சேவை

-79 அத்தம் செவ்வாய் இல்லை 18 பாவம் G.S மணமகனிற்கு மணமகள் தேவை. துர்க்கா திருமண சேவை,3703, பருத்தித்துறை வீதி, நல்லூர். 0778185978

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு



* குறிப்பு:- போக்குவரத்துக் கூலி அறவிடப்படமாட்டாது.
* ஒப்பந்தவேலைகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு இல:- 0777712482 சுன்னாகம்
0212241466 யாழ்ப்பாண[illegible]
0779847285 பருத்தித்துறை

இல. 207, புதிய எரிபொருள் நிலையம்
K.K.S. றோட், சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மடத்துக்கடவையான் எனும் புனை பெயரில்
ஆக்கங்கள் பலதை வெளிக்கொணரும்

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜன்**

(B.A) அபிவிருத்தி உத்தியோகத்தர் -
கூட்டுறவுத் திணைக்களம் வடமாகாணம்)
அவர்கள் 17.07.2014 அன்று பருத்தித் துறை
மாவட்ட உயர்திரு. கஜநிதிபாலன்
அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாண
வலயத்துக்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர்
மென்மேலும் பல சிறப்புக்கள் பெற்றிட
இறையாசி வேண்டி உளமார பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

மடத்துக் கடவை
குடும்பம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 05.07.2014 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

**இராசையா நவரத்தினராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் இன்று (04.08.2014)
திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெற
வுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள்
குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்கெடுத்து ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் சுவிஸ் ஒன்றியத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மடத்தடி வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (50574)(4.3.6)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி வினிதா (பாப்பா) வசந்தன்**



யாழ். கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வினிதா(பாப்பா) வசந்தன் 29.07.2014 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரா மற்றும் அன்னலட்சுமி(கமலா-ஜேர்மனி)தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நாகம்மா (இலங்கை) தம்பதியரின் அன்பு மருமகளும், வசந்தன்(நடா- நெதர் லாந்து) அவர்களின் அன்பு மனைவியும், மிதுஸ், இராதுஸ், சௌமிகா ஆகி யோரின் பாசமிகு தாயாரும், ரூபி, ரூபன், சாந்தன், ஞானி, மதனி, ராதி, வினோ ஆகியோரின் பாசமிகு சகோத ரியும், காலஞ்சென்ற முத்துமணியம் மற்றும் மகேஸ்வரி(இலங்கை), காலஞ்சென்ற நித்தியானந்த லிங்கம் மற்றும் பூபாலசிங்கம், விஜயரத்தினம், கண்டு, மகேஸ்வரன், சிவசோதி, செல்வராசா, தயாளன், யர்மிலி, மனுவேலா, ஒலிவியா ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2014) திங்கட்கிழமை 11.30 மு.ப.-1.30 பி.ப. Sint Annaschool Berkenlaan, 4881 XE Zundert, The Netherlands எனும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
Leeuwerikstr 56 B 4881 WZ Zundert
The Netherlands
வசந்தன் தொ.பே:+31765323784/
செ.பே:+31618422624 (நெதர்லாந்து) (50573)(4.6.3)

தகவல்:
முத்துமணியம் மகேஸ்வரி மற்றும்
குடும்பத்தினர்.
மீனாட்சியம்மன் கோயிலடி, சங்கத்தானை சாவகச்சேரி.
மகேஸ்வரி-இலங்கை செ.பே:+94778698715

## தஞ்சம் கோரியோர் விடயத்தில் உறுதிமொழியை மீறிய ஆஸி.

ஆஸ்திரேலியாவில் அகதித் தஞ்சம் கோரிச்சென்றிருக்கும் 157 தமிழர்களை 72 மணி நேர முன்னறிவிப்பு கொடுக்காமல் வேறு நாட்டுக்கு அனுப்பமாட்டோம் என்று ஆஸ்திரேலிய அரசு முன்பு நீதிமன்றத்தில் கொடுத்த உறுதிமொழியை மீறி விட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர்களைக் கடந்த வெள்ளியன்று இரவோடிரவாக ஆஸ்திரேலிய அரசு நவுரு தீவுக்கு அனுப்பியிருப்பதாக ஆஸ்திரேலிய தமிழர் பேரவையைச் சேர்ந்த பாலவிக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் வழியில் கடலில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் ஆஸ்திரேலிய நிலப்பரப்புக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த 157 தமிழர்களை நவுரு தீவிலுள்ள தஞ்சக் கோரிக்கையாளர் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இந்தியத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்க படகில் வந்தவர்கள் அனைவரும் மறுத்து விட்டதால், அவர்கள் அனைவரும் நவுருவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு வைத்து அவர்களது அகதி தஞ்சக் கோரிக்கை விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் என்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அப்பாட்டும், குடிவரவு அமைச்சர் ஸ்காட் மாரிசனும் அறிவித்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரியிலிருந்து கிளம்பியிருந்த இந்தியக் கொடி தாங்கிய படகு ஒன்றில் இவர்கள் ஆஸ்திரேலியா நோக்கி வந்தனர் என்று ஆஸ்திரேலிய அரசு கூறியிருந்தது. (வ)



திருயாத்திரைத் தலமான செட்டிகுளம் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா நேற்று நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.விக்ரர் சோசை அடிகளார்,அருட்பணி எம்.ஏ.ஜெயசீலன் அடிகளார் ஆகியோருடன் ஏனைய குருக்களுடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனியைத் தொடர்ந்து மன்னார் ஆயர் மன்னார் திருச்சொரூப ஆசீர் வழங்கிவைத்தார். (வ)

## வாள்வெட்டுக்கு இலக்கானார் வர்த்தகர்



கோப்புப்படம்

வலி. வடக்கு, ஓக.4

சன நடமாட்டம் மிக்க சுன்னாகம் நகரப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் முகத்தைத் துணியால் மூடிக் கட்டிக் கொண்டு வந்த இனந்தெரியாத இருவரால் சுன்னாகம் வர்த்தகர் ஒருவர் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள வர்த்தக வங்கிக்கு முன்பாக வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், தனது வீடியோக் கடையை மூடிவிட்டு வீட்டுக்குச் செல்ல நடந்து வந்தவரை வெட்டி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த நபர் உடனடியாக வீதியில் நின்றவர்களின் உதவியுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வாள் வெட்டுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சுன்னாகத்தில் வீடியோக் கடை நடத்தும் உரிமையாளரான இளவாலை பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜகுமார் (வயது - 37) என்பவராவார்.

சுன்னாகம் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

# இலங்கை அகதி மாணவர்கள் 62 பேர் பொறியியல் கற்கலாம்

### தமிழக அகதி முகாம்களில் வசிக்கும்

சென்னை, ஓக.4

தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதி மாணவர்களில் 62 பேர் 2014-15ஆம் கல்வியாண்டில் பொறியியல் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.

அவர்களில் 40 பேர் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் பொறியியல் படிப்புகளில் சேர்ந்துள்ளனர். இலங்கையிலிருந்து அகதிகளாகக் குடியேறுபவர்களின் குழந்தைகள் தமிழகத்திலுள்ள பாடசாலைகள், கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் தமிழகத்தில் உள்ள 110 அகதி முகாம்களைச்சேர்ந்த 2,200 மாணவ, மாணவிகள் இப்போது பாடசாலை, கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

2014 மார்ச் மாதம் நடைபெற்ற பிளஸ்-2 பொதுத் தேர்வை 687 இலங்கை அகதி மாணவர்கள் எழுதினர். அவர்களில் 604 பேர் தேர்ச்சி பெற்றனர்.

தேர்ச்சி பெற்றவர்களில் பலர் கலை அறிவியல் கல்லூரியிலும், பொலி டெக்னிக்கிலும் சேர்ந்தனர்.

பொறியியல் படிப்புகளில் சேருவதற்காக 60 இற்கும் மேற்பட்டோர் அண்ணா பல் கலைக்கழகம் நடத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வுக்கு விண்ணப்பித்திருந்தனர். கலந்தாய்வு முடிய இன்னும் இரு நாள்களே உள்ள நிலையில், சனிக்கிழமை வரை 40 பேர் பொறியியல் இடங்களைத் தெரிவு செய்து கல்லூரி சேர்க்கைக் கடிதத்தையும் பெற்றுள்ளனர்.

இதற்கிடையே, பிளஸ்-2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற அகதி மாணவர்கள் 22 பேருக்கு தனியார் பொறியியல் கல்லூரிகள் சில பொறியியல் கல்வியைப் பயில இலவச இடங்களை அளித்துள்ளன.

இதன்மூலம், 2014- 15 ஆம் கல்வியாண்டில் இதுவரை 62 இலங்கை அகதி மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் சேர்ந்துள்ளனர். கலந்தாய்வு நிறைவுபெற இரண்டு நாள்கள் உள்ளதால் மேலும் சில மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் சேர வாய்ப்பு உள்ளது என்று இலங்கை அகதிகள் மறு வாழ்வுக்கான அமைப்பின் நிர்வாகி பத்மநாபன் தெரிவித்தார். (வ)

## 'தென்மதி' அரையாண்டு சஞ்சிகை வெளியீடு



தென்மராட்சி கல்வி வலயத்தின் அரையாண்டு சஞ்சிகையான 'தென்மதி' கடந்த வியாழக்கிழமை யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தால் வெளியிடப்பட்டது. கல்வி வலயத்தால் கடந்த ஜனவரி தொடக்கம் ஜூன் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளையும் அறிவியல் ஆக்கங்களையும் கொண்டதாக சஞ்சிகை அமைக்கப்பட்டது. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அரச அதிபர் 'தென்மதி' சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். (வ-9)

## அகதிகள் பேரவை மீது குற்றச்சாட்டு

இலங்கையில் தங்கியுள்ள பாகிஸ்தானிய அகதிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை உரிய முறையில் செயற்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் வெளி விவகார அமைச்சு இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள பாகிஸ்தானிய அதிகாரிகளை நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது சட்டரீதியான நடவடிக்கையே என்று இலங்கையின் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை முறையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (வ)

## யாழ்.நகரிலிருந்து மண்டைதீவுக்கு குடிதண்ணீர் எடுத்து செல்லும் நபர்



யாழ்ப்பாணம், ஓக.4

தற்போது நிலவும் வறட்சி காரணமாக மண்டைதீவு பிரதேசத்தில் குடி தண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

குடிதண்ணீர் தேவைக்காக மக்கள் தூர இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


அந்தப் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் யாழ். நகருக்கு வந்து கான் ஒன்றில் குடி தண்ணீரை எடுத்துச் செல்கின்றனர். (வ-17)

## திருப்பழனி முருகன் ஆலய வரலாற்று நூல் வெளியீடு

வவுனியா சிதம்பரபுரம் யாத்திரிகர் மலை திருப்பழனி முருகன் ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய நூல் ஒன்று "ஈழத்துப்பழனி" என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது.

திருப்பழனி முருகன் ஆலயத்தின் திருப்பணிச் சபையினர், கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆலயத்தின் வருடாந்த கொடியேற்ற உற்சவ தினத்தன்று மேற்படி நூலை வெளியிட்டுள்ளனர்.

ஆலயத் தலைவர் அ.மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சிவசங்கரக் குருக்கள், நூலாசிரியர் சி.ஸ்ரீசங்கர சர்மா மற்றும் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், திருப்பணிச் சபை உறுப்பினர்கள், பரிபாலன சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். "ஈழத்துப் பழனி" நூலின் முதற் பிரதியை ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சிவசங்கரக் குருக்கள் வெளியிட்டு வைக்க வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் அதனைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன. (க-402)




நல்லூர் ஆலய சூழலில் ஊடக விளம்பரங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாநகர சபை முதல்வரால் அறிவிக்கப்பட்ட நிலையில் அரசுக்கு ஆதரவான ஊடகம் ஒன்றுக்கு மட்டும் விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஊடகத்தின் விளம்பர பதாகைகள் ஆலயத்தின் சுற்றுச்சூழல் வீதிகளில் தொங்கவிடப்பட்டுள்ளன. நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் திருவிழாக்காலங்களில் ஊடக விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று ஆலயத் திருவிழா தொடர்பான விசேட கூட்டத்தில் முதல்வர் தீர்மானமாக தெரிவித்திருந்தார். அத்துமீறி தொங்கவிடப்பட்ட விளம்பரப்பலகைகள் மாநகர சபையினரால் அகற்றப்பட்டன. இந்தநிலையில் நேற்று தொடக்கம் குறித்த ஊடகத்தின் விளம்பரப்பலகைகளை கண்டும் காணாதது போல் விட்டுள்ளது யாழ். மாநகர சபை (ற-14)

## ஆஸியில் கொல்லப்பட்டவரது உடல் 7 மாதங்களின் பின் நேற்று அடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 04

ஆஸ்திரேலியாவில் கடந்த ஜனவரி மாதம் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டவரது சடலம் 7 மாதங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டதுடன், நேற்றைய தினம் அடக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் வசித்த, சிவபெருமான் கேதீஸ்வரன் (வயது-35) என்பவரது சடலமே நேற்றையதினம் அடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வருடம் ஜூன் மாதம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற கேதீஸ்வரன், கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி.. அவரது வீட்டில் தங்கியிருந்த சமயம் 4 பேர் கொண்ட குழுவால் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு 5 வயதில் மகனும், 3 வயதில் மகளும் கிளிநொச்சியில் உள்ளனர். 7மாதங்களுக்கு



முன்னர் கொல்லப்பட்ட கேதீஸ்வரனது உடல் நேற்றுமுன்தினம் அவரது வதிவிடமான ஊற்றுப்புலத்துக் கொண்டு வரப்பட்டது. நேற் றைய தினம் இறுதிக் கிரியைகள் இடம் பெற்றது. இறுதிக் கிரியைகளை அவரது 5 வயதான மகன் செய்தார். இறுதிக் கிரியைகளின் பின்னர் சடலம் நேற்று மதியம் அடக்கம் செய்யப்பட்டது. (ற-5)

**English Classes**
Personal Classes
Gr. 3-O/L (50562)(4.3.6)
T.P: 077 331 4608

**Sky Computers (Pvt) Ltd**
அனைத்துப் பாடத்துக்குமான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம் TP:0212221417
Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.
Spoken English With Grammar (By:S.J.Suthan)
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 04.08.2014(திங்கள், வெள்ளி: 10.30 am)
89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

# பௌத்த மதத்தை அழிக்க முயற்சி செய்கின்றது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் கண்டி அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, ஓக.4

பௌத்த மதத்தை அழிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கண்டி அஸ்கிரி பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற 119ஆம் தேசிய தஹாம் பாடசாலை நாள் நிகழ்வுகளில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பௌத்த சாசனத்தை இல்லாதொழிக்கும் சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் பிரதமர் என்ற ரீதியில் நீங்கள் இதனை அறியாமல் இருக்க வாய்ப்பில்லை.

எதிர்கால தேர்தல் காரணமாக பௌத்த சாசன பாதுகாப்பு சட்டத்தை கூட கிடப்பில் போட முயற்சிக்கப்படுகின்றது என்று நம்பகத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

விஹாரை பூமியில் அரசின் செலவில் ஏதேனும் நிர்மாணிக்கப்பட்டால் அதன் சட்ட பூர்வ உரிமைஅரசையேசாரும் என மத்திய மாகாண விஹாரைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பிரதமர் கருத்து வெளியிட



வேண்டும்" என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ணவும் பங்கேற்றிருந்தார்.(ற)

## மரண அறிவித்தல்



### சின்னப்பொடி மரியராசா

பலாலியைப் பிறப்பிடமாகவும் சற்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி மரியராசா கடந்த (1.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி-அந்தோனி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் மரியசெபமாலை ராணி ஆகியோரின் அன்புக் கணவரும், நிக்சன்,ஜெயநாதன், ஜெயராணி,ஜெயசீலன், ஜெயராஜன், ஜெயரஞ்சன்,றஞ்சினி, பஞ்சு,றாயு, றெஜி,ரஞ்சித், றஜிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,லதா,மஞ்சுளா,அருள்ஞானரத்தினம், றோஸ்மலர், அமலஉற்பவநாயகி,அனு,ராஜா,றொசன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (04.08.2014) திங்கட் கிழமை மு.ப. 10 மணிக்கு சற்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பழைய வேதக் கோயில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

சற்கோட்டை, அல்வாய் வடக்கு

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்லையா செபஸ்ரியன் துரைச்சாமி

கொழும்பைப் பிறப்பிடமாகவும்,சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செபஸ்ரியன் துரைச்சாமி நேற்று (03.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்லியம் செல்லையா - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும்,காலஞ்சென்றவர்களான சபாபதி - கற்பகம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பிலோமினா நவமணியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற அருட்சகோதரி மார்சலினா, மற்றும் அந்தோனிப்பிள்ளை,இரத்தினம் ஆகியோரின் சகோதரனும், நேசராணி, அருட்சகோதரி ஸ்றெலா (திருக்குடும்ப கன்னியர்மடம்), மரிய கொரற்றி,காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் ஜெயபாலன்,ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தகப்பனும்,காலஞ்சென்றவர்களான பாக்கிய நாதன்,யேசுதாசன்; பாலா மற்றும் வசந்தி, யோகராணி, ரதினி ஆகியோரின் மாமனாரும்,துஷி, கிறிஷா, மானெல்,பிரவீன்,மனோஜ்,நிலுக்ஷனா,பிரியா,கஜன், டிலாந்தி,சுஜீபன், றெக்னோ அன்றா ஹர்ஷினி, லக்ஷன், டெஸ்மன் ஆகியோரின் பேரனும்,டவ(f)டில், ஹேசல்,கிறிஸ்டி, ஹரினி, சிவானி,லதுக்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (04.08.2014) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மோனிங் ஸ்ரார்'
மயிலங்காடு,சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 1919400

**தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்**
கொழும்பின் பிரபல A.S.K நிறுவனத்தின் இறுதி முன்னோடி வினாப்பத்திரங்களை (விடைகளுடன்) எமது புத்தகசாலையில் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**Mega Sale**
ARPICO
ஆடி தள்ளுபடி
என்றும் எங்கும் கிடைக்காத அமோக விலை குறைப்பு
மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 09.08.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.
SAAMSON LANGUAGE SCHOOL
ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313



**ACCOUNTS EXECUTIVE**
Our client is well established organization in hospitality industry in the Jaffna District.
In phase of their success full growth and expansion, they are currently searching for success full result oriental person for above mention position.

KEY FUNCTIONAL DELIVERABLES
- Record the receipts in cash book.
- Prepare the payment voucher and entered in cash book.
- Maintain the petty cash book
- Handling the daily purchase
- Maintain the staffs attendance register and leave records. and other required accounts and administration works.

IDEAL CANDIDATE SHOULD BE;
- AAT/HNDA Completed or partly completed with three years relevant experience.
- Ability to work in computerized environment and familiar with Ms Office.
- Possess high level of self motivation confidence and team orientation.



Special consideration will be given for experienced candidates.
Those who meet the specified criteria should send application letter with CV on or before 10, August 2014. e-mail to: mmayuran@kpmg.com
Manager Incharge, KPMG - Jaffna
(50514)(12.3.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.